
இன்பத்தை அள்ளித்தரும்
இந்துமதம்
2
தமிழறிஞர்
கே. வி. குணசேகரம்

# இன்பத்தை அள்ளித்தரும்
# இந்து மதம்

பாகம் - 02

தமிழறிஞர்
கே. வி. குணசேகரம்

# என்னுரை

அன்பார்ந்த வாசகர்களே! இது நாள் வரையும் ஆத்திசூடி, திருக்குறள், பகவத்கீதை, வேதங்கள், உபநிடதங்கள், ஆகமங்கள், திருமந்திரம் போன்ற இந்து மத நூல்களுக்குக் கதை எழுதினேன். இப்பொழுது மேற்கண்ட நூல் கூறும் வாழ்க்கைத் தத்துவங்களைக் கட்டுரைகள் மூலம் எழுதி வருகிறேன். இன்பமாக ஒருவன் வாழ எவையெவை அவசியமோ அவற்றையெல்லாம் இலகு தமிழில் எழுதி; ''இன்பத்தை அள்ளித்தரும் இந்து மதம்'' என்ற பெயரில் வெளியிடுகிறேன். இத்தொடர் பத்து நூல்களாக வெளிவரும். இந்நூலை அழகுறக் கணணி மயப்படுத்தித் தந்த செல்வி க. தேனமிர்தம் அவர்கட்கும், பிரதியை ஒப்புநோக்கிப் பிழைகளைத் திருத்தித் தந்த செல்வி ப. இறைமகள் ஆசிரியைக்கும், இந்நூலை வெளியிடும் லங்கா பதிப்பகத்தினருக்கும் நன்றி கூறிக்கொள்கிறேன்.

அன்புடன்,

கோட்டக்கல்விப் பணிப்பாளர்,
நல்லூர்,
இந்துமகளிர் கல்லூரி
யாழ்ப்பாணம்.

கே. வி. குணசேகரம்.
கோப்பாய் மத்தி கோப்பாய்.

பிரச்சினைகள், சிக்கல்கள், துன்பதுயரங்கள், போர்கள் நடைபெறும் போது மகிழச்சியாக இருக்கமுடியுமா...?

மனிதன் தோன்றிய காலத்தில் இருந்து உலகெங்கும் போர்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறன. இன்று போர் நடவாத பூமி எது? உலக நாடுகளில் ஒன்றைக் கூறுங்கள் பார்க்கலாம்.

ஒருவன் செய்யும் பாவபுண்ணியங்களுக்கேற்பப் பிறப்பேற்படுகிறது. ஒருவன் தான் செய்யும் பாவங்களையும் புண்ணியங்களையும் கணக்கிட்டுப்பார்த்துத் தான் பாவம் செய்தது கூட என்று உணர்ந்தானானால், அவன் எப்படியான பிறப்பை எடுப்பான் என்று அறிந்து கொள்ளலாம். போர் நடைபெறும் பூமியில் எல்லோரும் இறக்கிறார்களா...? அவரவர் செய்த பாவபுண்ணியங்களுக்கேற்பத் துன்ப துயரங்களை அனுபவிக்கிறார்கள்.

பிரச்சினைகள், சிக்கல்கள் துன்ப துயரங்கள் இல்லாத பூமி எங்கே உள்ளது? இவைகள் இல்லாத வீடு ஒன்றேனும் உலகில் இருக்கா...?

துன்பங்கள் தான் அனுபவங்களைத் தருகின்றன.

செயல்கள் கணிதபாடத்தைப் போன்றன. ஐந்தையும் ஐந்தையும் கூட்டினால் ஒரு விடை தான் வரும். அது போல நன்மையைச் செய்தால் தீமை வராது.

எல்லோருடனும் அன்போடு இருப்பவன் எல்லோராலும் மதிக்கப்படுவான். அவனும் மகிழ்வுடன் இருப்பான். அவனைச் சுற்றியுள்ளவர்களும் மகிழ்வுடன் இருப்பார்கள்.

74. ‘‘அன்புஈனும் ஆர்வம் உடைமை; அதுஈனும்

நண்பு எனும் நாடாச் சிறப்பு''.

அன்பு எல்லோரிடமும் விருப்பம் உடையவராக வாழும் தன்மையைத் தரும். அந்த அன்பு, நட்பு என்ற அளவற்ற சிறப்பினையும் தரும்.

''எல்லோருக்கும் துன்பம் வரும்'' என்று நினைப்பவனுக்குத் துயரம் வராது. அது இயற்கை என்று புரிந்து விடும்.

''நான் அனுபவிக்கும் துன்பத்திற்குக் காரண கர்த்தா நான் தான் பிறர் அல்ல'' என்று உணர்பவன் மகிழ்வுடன் இருப்பான்.

''அடுத்தவனுக்கு ஆலோசனைகள் கூறி, அவர்கள் அதைக்கேட்டு நடக்கவேண்டும்'' என்று நினைப்பவனுக்கு மகிழ்ச்சியிராது; ''ஒவ்வொருவரும் தன்தன் விருப்பப்படி நடக்கட்டும். யாராவது எதையாவது கேட்டால் சொல்வோம். அவர்கள் விரும்பினால் கேட்கட்டும். விருப்பமில்லாவிட்டால் விடட்டும்'' என்று நினைப்பவன் மகிழ்சியுடனே இருப்பான்.

''என்னுடைய துன்பங்களுக்கு நான் தான் காரணகர்த்தா. எனக்கு வேறுயாரும் துன்பத்தைத் தரமுடியாது. அதே போல மகிழ்சியையும் எனக்குள்ளே நானே உருவாக்க வேண்டும், அதை வேறு யாரும் தரமுடியாது'' என்று நினைப்பவன் மகிழ்வுடன் இருப்பான்.

மனமகிழ்ச்சியுடன் இருக்கும் இல்வாழ்வானின் இல்லத்தில் விரும்பிக் குடியேறி இருக்கும் தெய்வமும் மனமகிழ்வுடன் இருக்கும் என்கிறார் திருவள்ளுவர்.

84. ‘‘அகன்அமர்ந்து செய்யாள் உறையும் முகன்அமர்ந்து

நல்விருந்து ஓம்புவான் இல்’’.

முகமலர்வோடு விருந்தினரை வரவேற்று உபசரிக்கின்றவனது வீட்டில் மனமகிழ்வோடு திருமகள் வாழ்வாள்.

மகிழ்வு என்பது என்னவென்று திருவள்ளுவர் இப்படிக் கூறுகிறார்.

98. ‘‘சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும்

இம்மையும் இன்பம் தரும்’’.

பிறருக்குத் துன்பத்தைக் கொடுக்கும் சிறுமையில் இருந்து நீங்கிய இனியசொற்கள், இம்மையிலும் மறுமையிலும் பேசுவோருக்கு இன்பம் தரும்.

வள்ளுவர் மகிழ்வுடன் வாழ்வதற்குப் பல வழிகளைக் கூறியுள்ளார். மனதுக்கினிய பெண்ணுடன் சேரும் போதும் மகிழ்வு உண்டாகும் என்றும் வள்ளுவர் கூறுகிறார்.

1107. ‘‘தம்மில் இருந்து தமதுபாத்து உண்டற்றால்

அம்மா அரிவை முயக்கு’’.

தன்னுடைய வீட்டில் இருந்து தான்தேடிய பொருள்களைப் பிறருடன் பகிர்ந்து உண்ணும் போது உண்டாகின்ற இன்பம், அழகிய இந்தப் பெண்ணைத் தழுவும் போது ஏற்படுகிறது.

போர் நிறைந்த, சிக்கல்கள் மிகுந்த காலத்தில் எழுந்த திருக்குறள் மகிழ்வுடன் வாழும் வழிகளைக் கூறுகிறது. அப்படியாயிருக்க மகிழ்வில்லாமல் ஒருவன் இருந்தால் அது அவனது குற்றமே தவிர இன்னொருவரது குற்றம் அல்ல.

02) உயிர்கள் எல்லாம் கடவுளை அடைவதற்காகவே படைக்கப்பெற்றனவென்றால் உலக வாழ்வை அனுபவிப்பவர் யார்....? மனிதன் உலக வாழ்வைத் துறக்க வேண்டுமா?

ஒன்று எங்கு தொடங்குகின்றதோ அது அங்கு தான் முடியவேண்டும். ஒன்று எங்கு முடிகிறதோ அது அங்கு தான் தொடங்கவேண்டும் என்று சமயங்கள் கூறுகின்றன. உயிர்களின் நோக்கம் பிறப்பறுத்தல். எல்லா உயிர்களும் பிறப்பைக் கொடுக்கும் பற்றை நீக்கிவிட்டால் பூவுலகில் உயிர்கள் இருக்காதென்பதற்காகத்தான் இறைவன் இன்பதுன்பங்களைப் படைத்துள்ளான்.

உயிர்கள் ஆசை மிகுந்தன; அவாவுள்ளன. அவாவுள்ள உயிர்களால் இறைவனை அடையமுடியாது. உயிர்களைக் கானல் நீர் போலத் தோன்றும் பற்றுக்கள் இறைவனை அடையவிடமாட்டாது.

உயிர்களை இன்பமாக உலகில் வாழவே இறைவன் படைத்தான். போட்டி, பொறாமை, ஆசை, அவா, பற்று, கர்வம் போன்றவை இல்லாமல் அமைதியாக அன்புடன் வாழவேண்டும் என்பது தான் இறைவனின் விருப்பம்.

இல்வாழ்வைத் துறந்து தவஞ்செய்யுமாறு இறைவன் கூறவில்லை. இல்வாழ்வு வாழ்ந்து கொண்டே இறைவனை அடைதல் வேண்டுமென்றே பெரியவர்கள் கூறியுள்ளனர். இதற்காகத்தான் இறைவன் மனிதனைப்போலக் குடும்பத்தவனாக வாழ்கிறார். பின் ஏன் மனிதனைக் குடும்பத்தை விட்டுத் தன்னிடம் வருமாறு அழைக்கப்போகிறார்.

இல்வாழ்வானது கடமைகளைப் பற்றி வள்ளுவர் பின்வருமாறு கூறுகிறார்.

43. ‘‘தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தான்என்றாங்கு

ஐம்புலத்தாறு ஓம்பல் தலை’’.

தென்புலத்தார், தெய்வம், விருந்தினர், சுற்றத்தவர் என்பவர்களுடன் தன்னையும் போற்றுதல் இல்வாழ்வானது தலையாய கடனாகும்.

46. ‘‘அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றின்

போஒய்ப் பெறுவது எவன்?’’

ஒருவன் அறநெறிகளுக்குட்பட்டு இல்வாழ்வு வாழ்வதே சிறப்பானதாகும். அதை விடுத்துத் துறவு வாழ்வினை மேற்கொள்வதால் எந்தப் பயனையும் அவன் அடையமாட்டான்.

குடும்பத்தில் நல்ல மனைவி வந்து அமைந்தால் அது சொர்க்கம். அதன் பின் கடவுளை அடைந்து சொர்க்கத்தைத் தேடவேண்டியதில்லை. முன்பு இல்வாழ்வான் ஒருவன் துறவு பூணவேண்டுமானால் அவன் தனது பிள்ளை குட்டிகளை விட்டுவிட்டு மனைவியுடன் காட்டுக்குச் செல்வான். அக்கினி சாட்சியாக ஒரு பெண்ணைக் கைப்பிடிப்பவன் அவள் இறக்கும் வரைக்கும் அவளுடன் இருந்து அவளது இன்ப துன்பங்களில் பங்கேற்று வாழவேண்டும். அது போன்று மனைவியும் கணவனுடன் வாழவேண்டும். இப்படி இந்து தர்மம் கூறுகிறது.

49. ‘‘அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அ∴தும்

பிறன்பழிப்பது இல்லாயின் நன்று’’.

அறம் என்று சிறப்பித்துச் சொல்லப்படுவது இல்லறமே ஆகும். அதுகும் மற்றவன் பழிக்கும் குற்றம் இல்லாமல் இருந்தால் மேலும் சிறப்புடையதாகும்.

51. ‘‘மனைத்தக்க மாண்புஉடையள் ஆகித்தற் கொண்டான்

வளத்தக்காள் வாழ்க்கைத் துணை’’.

இல்வாழ்க்கைக்கு ஏற்ற நற்பண்புகளை உடையவளாகித் தன் கணவனின் பொருளாதார வளத்திற்கேற்ப வாழ்க்கை நடத்துகின்றவளே வாழ்க்கைத்துணை ஆவாள்.

61. ‘‘பெறுமவற்றுள் யாம்அறிவது இல்லை அறிவுஅறிந்த

மக்கட்பேறு அல்ல பிற’’.

அறிவுடைய மக்களைப் பெறுவதை விடப் பெரும்பேறு எவையும் இருப்பதை நாம் அறிந்ததில்லை.

62. “எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்

பண்புடை மக்கள் பெறின்”.

பழியில்லாத நல்ல பண்புடைய மக்களைப் பெற்றோரை ஏழு பிறவிகளிலும் தீவினைகள் எவையும் சென்று சேராது.

இல்வாழ்வான் மனைவியுடன் கூடி இன்பத்தைப் பெற்று, அதன் பயனாக நல்ல மக்களை உலகிற்கு அளித்தல் வேண்டும் என்கிறார் வள்ளுவர்.

81. “இருந்துஓம்பி இல்வாழ்வது எல்லாம் விருந்ஓம்பி

வேளாண்மை செய்தற் பொருட்டு”.

பொருள்களைத் தேடிக்காத்து இல்வாழ்க்கை நடத்துவதெல்லாம் விருந்தினரைப் பேணி உதவி செய்யும் பொருட்டே ஆகும்.

இல்வாழ்வானது முக்கிய பணிகளில் ஒன்று விருந்தோம்பல்.

87. “இனைத்துணைத்து என்பதொன்று இல்லை; விருந்தின்

துணைத்துணை வேள்விப் பயன்”.

விருந்தோம்பல் என்னும் வேள்வியின் பயன் இவ்வளவு என்று அளவுபடுத்திக் கூறமுடியாது. விருந்தினரின் தகுதியின் அளவே அந்த வேள்வியின் அளவாகும்.

விருந்தோம்பல் என்பது வேள்வி என்கின்றான் வள்ளுவன். அரசர்கள் அரசை அகட்டவும், நன்மைகள் பெறவும் பல யாகங்களைச் செய்து பெறும் பயனை இல்வாழ்வான் விருந்தோம்பல் மூலம் பெறுவான். வேள்வியின் மூலம் பெரும் பலனைப் பெற்றவன் கடவுளின் அடியில் பெறும் இன்ப துன்பங்களையெல்லாம் இல்வாழ்வான் வீட்டிலேயே பெறுவான். அதனால் மனிதன் உலக வாழ்வைத் துறக்காமலே பேரின்பத்தை அடையலாம்.

இன்பத்தைப் அடைவது தான் உயிர்களின் நோக்கம். இறைவனை அடைவதால் அது கிடைக்கும். அதைவிடப் பூவுலகில் வாழ்வாங்கு வாழ்நலும் அது கிடைக்கும். இறைவனை அடைவதற்காக உலகை வெறுத்துக் காட்டுக்குச் சென்று உணவில்லாமல் தவஞ்செய்ய வேண்டியதில்லை. அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு புருஷாத்தங்களைப் பற்றிக் கூறவந்த வள்ளுவன் மூன்று பால்களுக்குள் நான்கு புருஷாத்தங்களையும் அடக்கிவிட்டான். வீடுபேறு (மோட்சம்) வேறெங்கும் இல்லை. உனது வீட்டியேயே உள்ளது என்கிறான்.

நல்ல மனைவி அமைந்தாதல் மோட்சம் கிடைக்கும்.

நல்ல பிள்ளைகள் பெற்றால் மோட்சம் கிடைக்கும்.

ஒழுக்கமாக வாழ்ந்தால் மோட்சம் கிடைக்குமென்று கூறிய வள்ளுவன், இன்பத்துப்பாலில் திருமால் வாழும் உலகிலும் இல்லாத இன்பம் தான் காதலிக்கும் பெண்ணின் தோளில் சாய்ந்து தூங்கினால் கிடைக்கும் என்றான்.

1103. “தாம்வீழ்வார் மென்தோள் துயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணான் உலகு”.

தாமரைக் கண்ணனின் தேவருலகம், தான் விரும்பும் காதலியின் மென்மையான தோள்களில் சாய்ந்து தூங்குவதை விட இனிதாகுமோ...?

1101."கண்டுகேட்டு உண்டுஉயிர்த்து உற்றுஅறியும் ஐம்புலனும்

ஒண்தொடி கண்ணே உள".

கண்டும் ,கேட்டும், உண்டும், முகர்ந்தும், தொட்டும் அனுபவிக்கின்ற ஐம்புல இன்பங்களும் ஒளி பொருந்திய வளையலை அணிந்த இவளிடம் உள்ளன.

1106. "உறுதோறு உயிர்தளிர்ப்பத் தீண்டலால் பேதைக்கு

அமிழ்தின் இயன்றன தோள்."

அவளது தோள்களைத் தழுவும் போதெல்லாம் என்னுயிர் தவிர்க்கும் படி தீண்டுவதால், இவளது தோள்கள் அமிழ்தத்தினால் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

சொர்க்கம் என்று சொல்லப்படும் வீடு பேறு
ஒவ்வொருவரினது வீட்டிலும் இருக்கும் போது மனிதன்
ஏன் உலக வாழ்க்கையைத் துறக்க வேண்டும்.
ஒழுக்கமாக வாழ்ந்தால் அது சொர்க்கம்.

யசுர் வேத உபநிடதமான பிரகத் ஆரண்யக உபநிடதத்தின் சிறப்பான பகுதியாகக் கருதப்படும் யக்ஞவல்லிய காண்டத்தில் பின்வருமாறு கூறப்படுகிறது.

யக்ஞவல்லியர் துறவியல்ல குடும்பஸ்தர். அவருக்கு இரண்டு மனைவியர். ஒருத்தியின் பெயர் காத்யாயினி, அடுத்தவள் மைத்தேயி.

யக்ஞவல்லியர் குடும்பத்தில் இருந்து வெளியேறிக் காட்டுக்குச் சென்று தவஞ்செய்ய விரும்பினார். அதனால் தனது சொத்தைச் சரிசமமாகப் பிரித்து ஒன்றை காத்யாயினிடம் கொடுத்தார். அடுத்ததை மைத்திரேயிடம் கொடுத்து அச்செல்வத்தைக் கொண்டு கஷ்டமில்லாமல் நிம்மதியாக வாழும்படி கூறினார்.

“நீங்கள் தந்த செல்வத்தால் மனதிற்கு அமைதி கிட்டுமா...?” என்று கேட்டாள் மைத்ரேயி.

மைத்திரேயியின் கேள்வியில் உள்ள அர்த்தத்தைப் புரிந்து கொண்ட முனிவர் அதைப் புரிந்து கொள்ளாதது போல்; “இந்தச் செல்வங்களால் சுகம் கிட்டும்” என்றார்.

“நாதா இந்தச் செல்வங்களினால் நான் அழிவற்ற நிலையை அடைய முடியுமா...?” என்று மைத்திரயி கேட்டாள்.

“முடியாது” என்றார் முனிவர்.

“அப்படியான இச் செல்வத்தை நான் தீண்ட மாட்டேன்”

“ஏன்..?”

“அழிவற்ற ஒன்றை எனக்கு அளிக்காத செல்வத்தால் என்ன பயன் உண்டாகப் போகிறது?”

“அப்போ உனக்கு என்ன தேவை?”

“அழிவற்ற பொருள்”

“அது பிரமமும் ஆத்மாவும்”

“அதைப் பற்றி உபதேசியுங்கள். முன்பு கணவனாக இருந்து எனக்குச் சுகம் தந்தீர்கள். இனிக் குருவாக இருந்து உபதேசியுங்கள்”

இதிலிருந்து இல்வாழ்வான் எந்த இன்பத்தைப் பெறுவதானாலும் மனைவியுடன் சேர்ந்தே பெறவேண்டும் என்று இந்து தர்மம் கூறுகின்றது.

உலக வாழ்க்கையை வெறுக்கக் கூடாது. உலக வாழ்வின் மீது கொண்டிருக்கும் அளவுக்கதிகமான பற்றை விட்டு விடவேண்டும். ஒழுக்கத்தை உயிராகப் பேணவேண்டும்.

இராமானந்ததீர்த்தர் இல்லற வாழ்வைத் துறந்து துறவறம் மேற்கொண்டார். அப்பொழுது அவருக்கு மனைவியும் ஒரு மகளும் இருந்தனர்.

பாசம் மிகுந்த மனைவி ஒரு நாள் இராமானந்த தீர்த்தரைப் பார்க்க அவர் தவஞ் செய்யும் இடத்திற்குச் சென்றார். அவளைக்கண்ட தீர்த்தர் கண்களை மூடியபடி; “நான் துறவி. என்னை நீ வந்து பார்க்காதே” என்றார்.

இதைக்கேட்டுக் கலங்கிய அவரின் மனைவி; “நான் என்றோ பற்றுக்களை அறுத்துவிட்டேன். தாம்பத்திய உறவை மறந்து, ஒரு துறவியைச் சந்திக்கவே வந்தேன்” என்றாள்.

இராமானந்த தீர்த்தருக்கு அவமானமாக இருந்தது. தான் இன்னும் மனைவியின் உறவை நினைப்பதாக எண்ணி வருந்தினார்.

இராமகிருஷ்ன பரமகம்ஷரும் அன்னை சாரதாதேவி அம்மையாரும் எப்படி வாழ்ந்தார்கள்?. வாழ்க்கையை இன்பமாக அனுபவிக்க வேண்டும். அதை மோகிக்கக் கூடாது. வாழவேண்டுமே தவிர வாழ்க்கையைத் துறக்கக் கூடாது.

03) கடவுள் எல்லா உயிர்கள் மீதும் சமமான அன்பு வைத்திருந்தால் மக்களிடையே பணக்காரன் ஏழை என்ற பேதம் இராது. குருடு, செவிடு என்ற குறைபாடுகள் இராது. கடவுள் ஏன் எல்லோர் மீதும் சமமான அன்பு செலுத்துவதில்லை?.

முதலில் நாம் இறைவனின் பணி என்ன என்று சைவசித்தாந்தம் கூறுவதைப் பார்ப்போம்.

கடவுள் உயிர்கள் செய்த கன்ம வினையை உயிர்களுடன் சேர்த்து வைப்பதையே தொழிலாகக் கொண்டிருக்கிறார். உயிர் அறிவுள்ளது. வினைசடம். உயிர் சடமான வினையை விலக்கி வைக்க முயலும். அதை இறைவன் உயிருடன் சேர்த்து வைக்கிறார். இது சைவசித்தாந்தக் கடவுள்க் கொள்ளை.

சைவசித்தாந்தத்தில் கடவுள் பற்றிய கொள்ளையை வள்ளுவர் இப்படிக் கூறுகிறார்.

619. “தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன்

மெய்வருத்தக் கூலி தரும்”.

ஊழ்வினை காரணமாக தெய்வத்தின் துணை இல்லாது இருந்தாலும், ஒருவன் முயற்சியால் தனது உடம்பை வருத்திய வருத்தத்தின் கூலியாவது கிடைக்கும்.

தெய்வத்தால் எதுவும் செய்ய முடியாது. அதற்குக் காரணம் ஊழ். தெய்வத்தால் முடியாத செயலையும் முயற்சியுடன் மெய்வருந்தினால் செய்து முடிக்கலாம். அதற்கு உதாரணமாக நாயன்மார்களையும் புராண இதிகாச நாயகர்களையும் கூறலாம்.

இறைவன் பற்றில்லாதவன்; விருப்பு வெறுப்பில்லாதவன் என்கிறது சைவசித்தாந்தம். யார் மீதும் பற்று வைப்பதோ அல்லது யாரையாவது விரும்புவதோ இறைவனது குணம் அல்ல.

முயற்சி செய்ய வேண்டும் என்பதற்கு ஒரு கதை கூறப்படுவதுண்டு; “ஓர் ஏழை கடுந்தவஞ் செய்தான். அவனது தவத்தின் மகிமையால் இறைவன் அவனின் முனதோன்றி; “பக்தா, உனக்கு என்ன வரம் வேண்டும்?” என்று கேட்டார்.

பக்தன் மனம் மகிழ்ந்து; “நான் பெரிய பணக்காரனாக வேண்டும்”. என்று கேட்டான்.

இறைவன்; “அப்படியேயாகுக” என்று வரமளித்துவிட்டு மறைந்தார்.

பக்தன் வீட்டிற்கு வந்து பணம் பொருள் வருமெனக் காத்திருந்தான். நாட்கள் நகர்ந்தனவே தவிரப் பணம் பொருள் எதுவும் வரவில்லை. அதனால் மனம் வருந்திய பக்தன் மீண்டும் கடுந்தவம் புரிந்தான். கடவுள் அப்போது அவன் முன் தோன்றி; "என்ன வேண்டும்?" என்று கேட்டார்.

"இறைவா, நான் முன்பு கடுந்தவஞ் செய்த போது என் முன் தோன்றி நான் பணக்காரனாவேன் என்றீர்கள். எதுவும் நடக்கவில்லை" என்றான். கடவுள் சிரித்தார். பின் சொன்னார்; முன்பு அசுரர்களும், முனிவர்களும் என்னிடம் வரம்பெற்ற பின் செயலில் இறங்கினார்கள். அதனால் பயன் அடைந்தனர். நீ வீட்டில் எதுவும் செய்யாமலிருந்தால் எப்படிப் பணக்காரனாவாய்? கடைசி கிணறாவது வெட்டு புதையல் கிடைக்கும்" என்று கூறிவிட்டு மறைந்தார்.

இதனை வள்ளுவர் பின்வருமாறு கூறுகின்றார்.

4. "வேண்டுதல் வேண்டாமை இலான்அடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல".

எவ்வுயிர் மீதும் விருப்பு வெறுப்பில்லாத இறைவனின் திருவடிகளை நினைக்கின்றவர்களுக்கு ஒருபோதும் துன்பம் இல்லை.

கடவுளின் திருவடிகளை நினைப்பவர்களுக்குத் துன்பம் வராது. கடவுளை நினை என்று மட்டுமே சொல்கிறார். இலஞ்சமாக எதுவும் கொடுக்கச் சொல்லவில்லை.

289. "அளவுஅல்ல செய்தாங்கே வீவர் களவல்ல
மற்றைய தேற்றா தவா".

களவெடுப்பதைத் தவிர மற்ற நல்ல செயல்களை அறியாதவர்கள், அளவு கடந்த தீய செயல்களைச் செய்து அப்போதே அழிவார்கள்.

304. “நகையும் உவகையும் கொல்லும் சினத்தின்

பகையும் உளவோ பிற?”.

முகமலர்ச்சியையும் அகமகிழ்ச்சியையும் கொல்கின்ற சினத்தை விட ஒருவனுக்குப் பகையானவை வேறு உள்ளனவோ?.

321. “அறவினை யாதெனில் கொல்லாமை கோறல்

பிறவினை எல்லாம் தரும்”.

அறமாகிய செயல் எதுவென்றால் ஓர் உயிரையும் கொல்லாமை ஆகும். கொல்லுதல் அறமில்லாத எல்லாச் செயல்களையும் செய்ய வைக்கும்.

406. “உள்ர்என்னும் மாத்திரையர் அல்லால் பயவாக்

களர் அனையர் கல்லா தவர்”.

கல்லாதவர்கள் உயிரோடு இருந்த போதும், அவர்கள் பயிர்கள் விளையாத களர் நிலத்தைப் போன்றவர்கள் ஆவர்.

452. “நிலத்துஇயல்பால் நீர்திரிந்து அற்றாகும் மாந்தர்க்கு

இனத்துஇயல்பது ஆகும் அறிவு”.

சேர்ந்த நிலத்தின் இயல்பிற்கேற்ப நீர் வேறுபட்டு அந் நிலத்தின் தன்மையைப் பெறும்., அது போல மக்களின் அறிவும் சேரும் இனத்திற்கேற்ப மாறுபடும்.

484. “ஞாலம் கருதினும் கைகூடும் காலம்

கருதி இடத்தால் செயின்”.

செயலை முடிப்பதற்கு ஏற்ற காலத்தையும் இடத்தையும் அறிந்து செயற்பட்டால், உலகமே வேண்டு மென நினைத்தாலும் அதுவும் கைகூடும்.

535. ‘‘முன்னுறக் காவது இழுக்கியான் தன்பிழை

பின்ஊறு இரங்கி விடும்’’.

வரும் துன்பங்களை முன்பே அறிந்து காக்க மறந்தவர்கள், பின்பு அவை வந்த போது தமது தவறை உணர்ந்து வருந்துவர்.

539. ‘‘இகழ்ச்சியின் கெட்டாரை உள்ளுக தாம்தம்

மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து’’.

மகிழ்ச்சியால் செருக்குக் கொண்டு கடமையை இகழ்ந்து மறந்திருக்கும் போது, அவ்வாறு மறந்திருந்த காரணத்தால் முன்பு அழிந்தவரை நினைத்துப் பார்த்தல் வேண்டும்.

605. ‘‘நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்

கெடுநீரார் காமக் கலன்’’.

கால தாமதம் செய்தல், மறதி, சோம்பல், அளவுக்கதிகமான நித்திரை ஆகிய இந் நான்கும் கெடுகின்ற இயல்புடையோர் விரும்பி ஏறும் மரக்கலன்கள் ஆகும

கடவுள் எல்லா உயிர்கள் மீதும் சமமான அன்பு வைத்துள்ள போதும் ஒவ்வொருவரும் செய்யும் செயல்கள் மூலம் தமக்குத் தாமே இன்பத்தையும் துன்பத்தையும் தேடிக்கொள்கின்றார்கள்.

திருடுபவன் அழிவான்; கோபங்கொள்ளக்கூடாது; உயிளைக் கொலை செய்யக் கூடாது; நன்றாகக் கல்; நல்லவர்களுடன் சேர்; காலத்தையும் இடத்தையும் அறிந்து செயலில் இறங்கு; துன்பங்கள் வருமுன் அறிந்து கொள்; கர்வம் கொள்ளாதே; மறதி, சோம்பல் கொள்ளாதே'' மேற்கூறியவற்றை அனுசரித்து நடந்தால் நன்மையடைவாய் கடவுளால் யாருக்கும் உதவி செய்ய முடியாது.

மனிதப் பிறப்பினைப் பெற்ற ஒருவன் ஒழுக்கமாக வாழ்ந்தால் கூன், குருடு, செவிடு முதலிய அங்கக் குறைபாடுகள் வரமாட்டாது. மனிதப் பிறவியில் செய்யும் நன்மை, தீமைகளுக்கிணங்கவே பிறவி கிடைக்கும்.

''செய்யும் தொழில் தான் தெய்வம்'' என்று நம் முன்னோர் சொல்லியிருப்பதன் காரணம் எந்தத் தொழிலையும் அக்கறையுடன் மெய்வருந்திச் செய்தால் முன்னேறலாம் என்பதற்காகவே.

04) சமணரும் பௌத்தரும் வேதங்களை ஏற்பதில்லை. அதற்குக் காரணம் அதர்வணவேதம் பில்லி சூனியம் செய்வது பற்றியும், பேயை ஏவிவிடும் முறை பற்றியும் கூறுவதாகும் என்றொரு கருத்து நிலவுவது உண்மையா...?

வேதத்தை ஏற்ற வைதீக சமயங்களிற் சில கிரிகைகளை ஏற்பதில்லை. வேதத்தைப் புறக்கணிக்கும் அவைதீக சமயங்கள் வேதத்தின் இறுதிப் பகுதியாகக் கருதப்படும். உபநிடதக் கருத்துக்களை ஏற்கவில்லை என்று கூறவில்லை.

ருக்வேத மந்திரப்பாடல்கள் பகைவரிடமிருந்து மக்களையும், பசுக்களையும் பாதுகாக்கும் படியும், உணவுக்காகத் தானியங்களை அள்ளித் தரும்படியும் ஆண்டவனைக் கேட்கின்றன.

யசுர் வேதம் வீட்டிலும் வெளியேயும் நடக்கும் சடங்குகளைப் பற்றித் தொகுத்துக் கூறுகின்றது. அத்துடன் அஸ்வமேதயாகம், இராசசூரியயாகங்களைப் பற்றியும் அவற்றின் செயன்முறைகளைப் பற்றியும் அதனால் வரும் நன்மைகளைப் பற்றியும் கூறுகின்றது.

சாமவேதப்பாடல்களில் பெரும்பாலானவை ருக்வேதத்தல் இருந்து எடுக்கப்பட்டவை. இசையுடன் பாடுவதற்காக இவை சாமவேதத்தில் சேர்க்கப்பட்டன. சாமவேதம் கேட்பதற்கு மிகவும் இனிமையானது. அதனால் “சாமகானம்” என்று சொல்லப்படுகின்றது.

நான்காவது வேதம் அதர்வணம். மற்றய மூன்று வேதங்களில் இருந்து முற்றிலும் இவ்வேதம் வேறுபட்டது. மாந்திரீகம், மருத்துவம் தொடர்பான விடயங்கள் இதில் கூறப்பட்டுள்ளது. மற்றய மூன்று வேதங்களும் ஆன்மாவின் ஈடேற்றம் பற்றியே கவனஞ்செலுத்துகின்றன.

மற்றய மூன்று வேதங்களைப் போல அதர்வண வேதப் பாடல்களும் தெய்வங்களைப் போற்றுகின்றன. அவர்களிடமிருந்து உதவிகளைக் கோருகின்றன. மற்றய வேதங்கள் ஆன்ம ஈடேற்றம் பற்றித் தெய்வத்திடம் வேண்ட, அதர்வணவேதப்பாடல்கள் மானிட

உடம்பிற்கு ஏற்படும் தொல்லைகளைத் தவிர்க்கும்படி தெய்வத்தைக் கோருகின்றன.

ஆத்ம ஈடேற்றத்திற்கு வலுவான உடல் தேவையென்பதை அதர்வண வேதப் பாடல்களை இயற்றிய ரிஷிகள் உணர்ந்தனர். அதனால் உடலுக்கேற்படும் நோய்களிலிருந்தும் அபாயங்களிலிருந்தும் மக்களைக் காப்பாற்றும்படி இறைவனை வேண்டினார். இவ்வேதத்தில் 5987 பாடல்கள் உள்ளன.

அதர்வண வேதப்பாடல்கள் உடலில் உள்ள துன்பங்களை நீக்கும்படியும், ஒரு பெண்ணுக்கு நல்ல கணவனும், ஒரு ஆணுக்கு நல்ல மனைவியும், பெண்ணிற்கு மலட்டுத் தன்மை நேரிடாது குழந்தைப் பாக்கியத்தைக் கொடுக்கச்சொல்லியும், கருச்சிதைவை உண்டாக்க வேண்டாமென்றும் கடவுளை வேண்டுவதாகவே அமைந்துள்ளன. இதைவிட ஒரு பாடல் வீடுகட்ட உதவும்படியும் கோருகிறது.

இன்னும் சில பாடல்கள் விதைவிதைக்கவும், முளைத்த பயிருக்கு நோய்வரக்கூடாதென்றும், பின் விளைச்சல் அதிகரிக்க வேண்டுமென்றும், அறுவடை செய்த தானியங்களை நல்ல முறையில் வீட்டிற்குக் கொண்டுசெல்ல வேண்டுமென்றும், இறைவனிடம் கோருகின்றன.

சம்ஹிதையில் உள்ள 14 பகுதிகளில் பாடலாசிரியர் அக்கினியையும், வருணனையும், சந்திரனையும் மக்களுக்குக் காய்ச்சல், இருமல், தலைவலி ஆகியன வரக்கூடாதென்று இரக்கிறார்.

"அக்கினி பகவானே! காய்ச்சலை உலகிலிருந்து விரட்டு. அதற்காகச் சோமனையும் வருணனையும் உன்னோடு சேர்த்துக்கொள். நீங்கள் மூன்று பேரும் சேர்ந்தால் தான் அந்தக் கொடியவனை விரட்ட முடியும். தெய்வங்களே, இக் கொடியவனை உலகத்தில் இருந்து விரட்டுங்கள். இல்லாவிட்டால் அக்கொடியவன் அனைத்து உயிர்களையும் கொன்றுவிடுவான். முப்பெருந்தெய்வங்களே, காய்ச்சல் என்னும் கொடியவனின் கொட்டத்தை ஒடுக்குங்கள்; அவன் மீண்டும் தலையெடுக்காதபடி அழியுங்கள்; அவர்களைக் குழி தோண்டிப்புதையுங்கள்"

காய்ச்சலைக் குணப்படுத்த குஷ்த்தா என்ற மூலிகையால் தான் குணப்படுத்த முடியும். அதனால் பாடலாசிரியாகள் குஷ்த்தாவையும் தெய்வமாகக் கருதிப் பாடல்களைப் பாடியுள்ளனர்.

தலைவலி, இருமல், மஞ்சள்காமாலை போன்ற நோய்களைக் குணப்படுத்தும் படியும் பாடப்பட்ட பாடல்கள் அதர்வண வேதத்தில் உள்ளன.

ஆண்குழந்தை தேவையென்றும், அக்குழந்தைகள் வீரம் மிக்கவையாக இருக்க வேண்டுமென்றும், அவை நூறு கோடை காலத்தையும் நூறு குளிர்காலத்தையும் பார்க்க வேண்டும் என்றும் இந்திரனையும் பிரகஸ்பதியையும் சூரியனையும் வேண்டிப் பாடிய பாடல்களும் இருக்கின்றன.

அத்துடன் பேயை விரட்டும் பாடல்களும் உள்ளன. ஏவலின் மூலம் ஒரு பெண்ணிற்குப் பேய்பிடித்ததை விரட்டும் பாடல் பின்வருமாறு அமைகின்றது.

“பேயே, உன்னால் இவள் பெரும் துன்பத்தை அடைகிறாள். அவளின் நல்வாழ்வை நீ கெடுத்துவிட்டாய். அவளை விட்டு நீ சென்றால் அவள் பழைய நிலைக்குத் திரும்பிவிடுவாள். கணவன் அவள் மீது அன்பு கொள்வான். ஓடு அவளை விட்டு ஓடு”.

“பேயே! எனது கையில் மந்திர சக்தி மிக்க தண்டம் உள்ளது. அதனால் அடிப்பேன். எனது மந்திரங்கள் உன்னைக் கொன்றுவிடும். உன்னை அனுப்பியவனிடம் போ. இல்லாவிட்டால் கொடிய மந்திரங்களைப் பிரயோகிப்பேன்”.

அதர்வண வேதம் மக்களின் உடலைப் பற்றிப் பிடித்திருக்கும் நோய்களைப் பற்றியும், அதை நீக்கும் வழிமுறைகளைப் பற்றியும் விரிவாகக் கூறுகின்றது. உடல் நோயில்லாமல் இருந்தால் தான் ஆத்ம ஈடேற்றம் உண்டென்று கூறும் இவ்வேதம் ஆத்மாவைப் பற்றியும் 33 பாடல்களில் கூறுகின்றது.

மற்றைய வேதங்களைவிட மக்களுடன் மிகவும் நெருக்கமாக உள்ள வேதம் அதர்வண வேதமாகும். ஆத்மாவைப் பற்றி மற்றைய வேதங்கள் கூற, அதர்வண வேதம் சாதாரண மக்கள் பேணும் உடம்பைப் பற்றியும் அவ்வுடலில் உண்டாகும் நோய்களைத் தீர்க்கும் முறைகள் பற்றியும்,

பெண்ணுக்குத் திருமணம் நடைபெறவும், அவளுக்குக் கருச்சிதைவு உண்டாகாது பலம் மிக்க குழந்தை பிறக்கவேண்டுமென்றும், அவளைப் பேய், பிசாசுகள் பிடிக்கக் கூடாதென்றும் கூறுவதால் அது மக்களிடையே பெரும் செல்வாக்கை இன்றும் பெற்றுள்ளது. இப்பொழுதும் திருநீறு இட்டு நூல் கட்டுவது வழக்கத்தில் உள்ளது.

அதர்வண வேதத்தின் உபநிடதங்களைப் பற்றி இனிப்பார்ப்போம். முண்டகம், பிரசன்னா, மாண்டூக்கியமென்று அதர்வண வேத உபநிடதங்கள் மூன்று உண்டு. முண்டக உபநிடதத்தின் பெரும் பான்மையான பாடல்கள் பிரமத்தைப் பற்றியவையாகவே அமைகின்றன. அறிவில் உயர்ந்த அறிவு, தாழ்ந்த அறிவென இருவகை அறிவுகள் உண்டென முண்டக உபநிடதம் கூறுகிறது. படிப்பதால் பெறும் அறிவு தாழ்ந்ததென்றும், ஒழுக்கத்தினால் பெறும் அறிவு தான் உயர்ந்தது என்றும் இவ்உபநிடதம் கூறுகின்றது. நல்லதைச் செய்பவர்கள் தான் பண்பாளர், நல்லதைச் சொல்பவர்கள் பண்பாளர்கள் அல்லர் என்றும் இவ் உபநிடதம் கூறுகின்றது. இதன் மூலம் வேதத்தைக் கற்காமல் சடங்குகளைச் செய்யாமல் பிரமத்தை அடையலாமென்று கூறுகின்றது. இக்கருத்துக்கள் திருக்குறளில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

பிரஸ்கா உபநிடதம் பிப்பிவாதவர் என்றும் குரு தனது ஐந்து சீடர்களுக்குச் செய்யும் உபதேசமாக அமைகிறது. பிரமத்தை அடைவது தான் ஆத்மாவின் இலட்சியம். அதை எவ்வாறு அடையலாமென்று தனது சீடரான கார்க்கேயருக்குப் பிப்பிவாதர் கூறுகிறார். எனினும் அவை விளக்கமாக இல்லை.

இருப்பினும் இவ்வுபநிடதம் மானிட உடல் தொடர்பான பல விளக்கத்தில் ஈடுபடுகிறது; “பிரமம் என்பது கடல். அதில் ஆத்மா ஆகிய ஆறு கலக்கிறது. அதன் பின் ஆறு தனது பெயரை இழந்து கடலாகிறது”. என்கிறார் பிப்பிவாதர்.

மாண்டூக்கிய உபநிடதம் மிகச்சிறியது. சடங்குகளைப் பற்றியும் கிரிகைகளைப் பற்றியும் மாண்டூக்கிய உபநிடதம் மௌனம் சாதித்துள்ளது.

மாண்டூக்கிய உபநிடதத்தின் முதற்பாடல் “ஓம்” என்ற பிரணவமந்திரத்தைப் பற்றிச் சொல்கிறது. அந்த ஒலியின் வடிவம் யானை முகங்கொண்ட பிள்ளையார் என்கிறது. பிள்ளையார் சிவனின் மூத்த மகன் என்றும், பிரமம் சிவனென்றும், பிள்ளையாரை வணங்காமல் எந்தச் செயலையும் செய்யக்கூடாதென்றும், மாண்டூக்கிய உபநிடதம் கூறுகிறது.

வேதங்கள் தான் ஆரம்பத்தில் கடவுள், உலகம், ஆன்மா என்ற ஆராய்ச்சியில் ஈடுபட்டன. புத்தர் இந்து சமயத்தில் இருந்து வேத உபநிடதங்களைக் கற்றுத் தெளிந்தவர். அவர் தான் இந்து சமயத்தின் கிரியைகளை எதிர்த்த முதல் சீர்திருத்தவாதி, கிரியைகளைப் பற்றி அளவுக்கதிகமாக வேதங்கள் கூறியமையாலும், கடவுளைப்பற்றியும், ஆன்மாவைப்பற்றியும கூறியமையாலும், கடவுளும், ஆன்மாவும் இல்லையென வாதிடும் பௌத்தரும் சமணரும் வேதங்களை ஏற்கவில்லை.

வேதங்களில் மிகவும் அற்புதமானது அதர்வணவேதம். அது தான் சைவசித்தாந்தத்தின் தோற்றத்திற்கும் காரணமானது. மாண்டுக்கிய உபநிடதம் தான் சிவனை எமக்குத் தந்தது. பில்லி சூனியங்கள், பேய் பிடித்தல், நோய்வாய்ப்படல் ஆகிய உடல் உபாதைகளைப் பற்றி மிகவும் விரிவாக அதர்வண வேதம் எடுத்துக்கூறுவதால் அவ்வேதத்தை மக்கள் பின்பற்றத் தொடங்ககினர். அதர்வண வேதத்தில் பிராமணர் செய்யும் கிரிகைகள் குறைவு. அதனால் இவ் வேதம் தனது சிறப்பை இழந்திருக்கலாம்.

05) நாம் கடவுளின் மீது அன்பு வைத்துவிட்டு பின் நம்பிக்கை வைக்கவேண்டுமா? இல்லாவிட்டால் நம்பிக்கை வைத்துவிட்டு அன்பு வைக்கவேண்டுமா...?

கடவுள் எண்குணங்களையுடையவர். அவையாவன தன்வயத்தானாதல், இயற்கை உணர்வினன் ஆதல், முற்றும் உணர்தல், இயல்பாகவே பாசங்களிலிருந்து நீங்கல், பேரருள் உடைமை, முடிவில் ஆற்றல் உடைமை, வரம்பு இல் இன்பம் உடைமை. ஆனால் மனிதன் எண்ணாயிரம் குணங்களை உடையவன். மனிதன் இன்னொருவன் மீது அன்பு வைக்கும் போது அது உள்நோக்கமுடையதாக இருக்கும். தனது தேவை முடிந்ததும் அன்பு பெரும்பாலும் முடிவுக்கு வந்துவிடும். மனிதர்கள் மீது நட்பு வைத்தபின் அது நல்ல நட்பா, தீய நட்பா என நன்றாக ஆய்வு செய்தபின்பு தான் நம்பிக்கை வைத்தல் வேண்டும்.

இப்படி ஆய்வு செய்து வைக்கும் நம்பிக்கைக்கும் பலர் துரோகமிளைப்பதைப் நான் கண்டுள்ளேன்.

கடவுள் வரம்பில்லாத அன்பை எம்மீது சொரிபவர். அதனால் மனிதர்கள் முதலில் கடவுளின் மீது நம்பிக்கை வைக்கவேண்டும். நம்பிக்கை வைத்த பின் அன்பு காட்டாற்று வெள்ளம் போலப் பெருகும்.

ஆரம்பத்தில் இறைவன் மீது நம்பிக்கை வைப்பதைப் பக்தி என்று சொல்லப்படுகிறது. நாம் இறைவன் மீது பக்திவைக்கும் போது கடவுள் பக்தர் என இருவர் உள்ளனர். கடவுள் மீது அடியார் பக்தி கொள்ளக் கொள்ள இறைவன் அடியார் மீது கருணை கொள்வான். அதனால் இருவரும் மிகவும் நெருங்கிவிடுவார்கள். அதனால் அடியவனுக்கு தன்னில் இறைவன் கருணைகொண்டுள்ளான் என்ற நினைவு மனதில் வரும். தனக்கு வரும் இன்பங்களையெல்லாம் இறைவன் தருகிறான் என்ற எண்ணமும், தனக்கு வரும் துன்பங்களைப் போக்கித் தன்னைக் காப்பாற்றுவார் என்ற நம்பிக்கையும் வரும். அதன் பின் பக்தன் இறைவனிடம் சரணாகதியடைந்துவிடுவான். சரணாகதியென்பது இறைநம்பிக்கையின் முழுமையான வடிவம். பாலும் தேனும் கலந்துள்ளதைப் போன்ற நிலை.

அதனால் மக்கள் கடவுளின் மீது முதலில் நம்பிக்கை வைத்தல் வேண்டும். அதன் பின் வைக்கும் அன்பில் தான் மகிமை இருக்கும். நம்பிக்கை வைக்காமல் அன்பு செலுத்துவது சாரதியை நம்பாது பிரயானம் செய்வதைப் போன்றது.

06) மக்களிடம் போட்டி, பொறாமை, நம்பிக்கைத்துரோகம், கோபதாபங்கள், கர்வம் போன்றன ஏன் உண்டாகின்றன..?

கீதையில் கண்ணன் மனிதர்களுக்கு மூன்று குணங்கள் உண்டென்கிறார்.

அவை சத்துவகுணம், ரஜோ குணம், தாமோ குணம் என்பனவாகும்.

இம்மூன்று குணங்களைப் பொறுத்தே மனமும் உடலும் அமையும்.

உடல் ஆன்மா மீது ஆதிக்கம் செலுத்துகிறது. ஆனால் ஆன்மா உடலை ஆதிக்கம் செய்ய முடியாது போராடுகிறது. ஐம்புலன்களால் வரும் இச்சைகளைத் தீர்க்கும்படி உடல் மனதை வற்புறுத்துவதால் தான் மேற்சொல்லப்பட்டவையெல்லாம் நடைபெறுகின்றன. மனம் உடலைக் கட்டுப்படுத்தினால் தீமைகள் வரவாய்ப்பிபில்லை.

சத்துவ குணமுள்ள மனிதன் ஆன்மாவைக் கட்டுப்படுத்தி தனது ஆதிக்கத்துள் வைத்திருப்பான்.

ராஜோ குண மனிதன் ஆன்ம ஈடேற்றத்தைப் பற்றிச் சிந்திக்காது ஐம்புலன்களாலும் சகலவிதமான இன்பங்களையும் அனுபவித்துக் கொண்டிருப்பான். உடலில் மீது அவனுக்கு அதீத பற்றிருக்கும்.

தாமோ குணமுள்ளவன் ஆன்மா, உடம்பு இரண்டையும் பற்றிய உணர்வுகளும் இல்லாமல் வாழ்வான்.

கல்வி அறிவும், உடல் மீது பற்றில்லாத தன்மையும், புலனடக்கமும், எந்த விடயத்திலும் அக்கறைப்படாத தன்னையும், எல்லாம் கடவுள் செயல் என்று எண்ணும் தன்மையும் கொண்ட சத்துவ குணமுள்ள மனிதன் தீயவற்றை நினைத்துக்கூடப் பார்க்கமாட்டான்.

ராஜோ குணமனிதன் தான் மற்றவர்களின் முன்னேற்றத்தைக் கண்டு பொறாமைப்படுவான்; மற்றவர்களுடன் போட்டி போடுவான்; நம்பியவர்களைக் கெடுப்பான்; கோபங்கொள்வான்; கர்வத்துடன் நடந்து கொள்வான்.

ஒரு மனிதன் உண்ணும் உணவுகளால் உண்டாகும் தேக உணர்வுகளே இதற்குக் காரணமாகும்.

எல்லாவற்றிற்கும் தானே தலைமை தாங்கவேண்டும் என்று எண்ணுதல், யாரோ செய்த சேவைகளைத் தான் செய்ததாக மற்றவர்களுக்குக் கூறுதல், தன்னை எப்பொழுதும் மற்றவர்கள் உயர்வாகப் பேசவேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள் மற்றவர்கள் மீது பொறாமைப்படுவார்கள்; உதவி செய்தவர்களை மறப்பார்கள்; தனது காரியம் முடிந்ததும் உதவியவர்களைக் கைகழுவிவிடுவார்கள். அடுத்தவர்களிடம் உதவி பெற்று வீடு கட்டினாலும் அதைத் தான் தான் கட்டினேன் என்பார்கள். பின் கடனைக் கொடுக்காமல் விடுவதால் ஊரே சிரிக்கும். அப்பொழுது அவர்களுக்குக் கோபம் வரும்.

தாமோ குணமுள்ளவன் கிடைத்ததை உண்பான். குடும்பத்தைப் பற்றிய சிந்தனை இல்லாமல் எங்காவது ஏதாவது கிடைத்தால் அங்கே அதை வாங்கி உண்டுவிட்டு அங்கேயே படுத்தும்விடுவான். வேலை செய்ய அவனைச் சோம்பல் விடாது. இவனுக்குக் கோபம் வராது. பொறாமைப்பட மாட்டான்; அடுத்தவனைக் கெடுக்கத் தெரியாது; நம்பிக்கைத் துரோகம் செய்யவும் தெரியாது. வாழத்தெரியாதவன் இவன்.

மனிதனுக்கு ஏன் கோபம் வரவேண்டும்? மனிதநேயமின்மை, மற்றவனைத் தன்னைப் போல மதிக்காமை; தான் சொல்வது தான் சரியென்ற எண்ணம்; நண்பர்கள் செய்த உதவிகளை மறத்தல் போன்றவை தான் கோபத்திற்குக் காரணம்.

உன்னிடம் உள்ள குறையை இன்னொருவர் சுட்டிக்காட்டினால் நீ சிந்தித்துப் பார்க்க வேண்டும். அவர் கூறியது உண்மையானால் அதைத்திருத்த வேண்டும்; பொய்யானால் சிரிக்கவேண்டும். நீ எப்பொழுதும் உன்னைக் குற்றமுள்ளவனாக நினைத்து உண்மையை ஆராயவேண்டுமே தவிர அடுத்தவர்களுடன் பிரச்சினைக்குப் போகக்கூடாது.

பொறாமையால் தான் பலர் அழிந்தனர். பாரதயுத்தமே பொறாமையால் தான் வந்தது. ஒருவனது உயர்ச்சியைத் தாங்க முடியாததால் தான் பொறாமை ஏற்படுகிறது. இது இருதயத்தை அழித்து வாழ்க்கையைக் கெடுக்கும். பொறாமையால் போட்டியும் ஏற்படும். போட்டி வந்ததும் கர்வம் உண்டாகும். அது அழிவைத்தான் தரும்.

376. “பரியினும் ஆகாவாம் பால் அல்ல; உய்த்துச்
சொரியினும் போகா தம”.

ஊழின் காரணத்தால் தமக்குரியவை அல்லாத பொருள்களை வருந்திக் காப்பாற்றினாலும் தங்காமல் போய்விடும்; தமக்குரியவையை கொண்டு போய்க் கொட்டினாலும் போகாது.

நம்பிக்கைத் துரோகம் செய்வது கொலை செய்வதற்கு ஒப்பானது.

952. “ஒழுக்கமும் வாய்மையும் காணும்இம் மூன்றும்
இழுக்கார் குடிப்பிறந் தார்”.

உயர் குடியில் பிறந்தவர்கள் ஒழுக்கமும் வாய்மையும் நாணமும் ஆகிய இம் மூன்றில் இருந்தும் தவறாமல் இயல்பாகவே நல்லவழியில் வாழ்வார்கள்.

திருவள்ளுவர் நல்லகுடியில் பிறந்தவர்களுக்கு நல்ல குணங்கள் இருக்குமென்று கூறுகிறார். போட்டி பொறாமை, கோபதாபம், கர்வம் போன்றன நல்ல குடியில் பிறந்தவர்களிடம் இராது. இங்கு நல்ல குடியென்று வள்ளுவர் குறிப்பிடுவது,

110. “எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு”.

எந்தப் பழி, பாவங்களைச் செய்தவர்களும் தப்பிப் பிழைக்க வழியண்டு. ஆனால் ஒருவர் செய்த உதவியை மறந்தவனுக்குத் தப்பிப் பிழைக்க வழி இல்லை

133. “ஒழுக்கம் உடைமை குடிமை; இழுக்கம்

இழிந்த பிறப்பாய் விடும்”.

குடும்பத்தின் உயர்வும் தாழ்வும் ஒழுக்கத்தில் தங்கியுள்ளது. ஒழுக்கமுடையவனாக வாழுதல் உயர்ந்த குடிமகனின் தன்மை. ஒழுக்கம் தவறி வாழ்தல் ஓர் இழிந்த குடிமகனின் தன்மை.

433. “தினைத்துணையாம் குற்றம் வரினும் பனைத்துணையாக்

கொள்வர் பழிநாணு வார்”.

பழிக்கு அஞ்சுகின்ற பெரியோர்கள் தினையளவு குற்றம் ஏற்பட்டாலும், அதை பனையளவாக எண்ணி மறுபடியும் அக் குற்றத்தைச் செய்யாமல் காத்துக் கொள்வர்.

653. “ஓஒதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை

ஆஅதும் என்னு மவர்”.

மேலும் மேலும் உயர்வடைய விரும்பிச் செயலில் ஈடுபடுவார்கள், தம்முடைய புகழ் கெடுவதற்குக் காரணமான செயல்களைச் செய்யாமல் விட வேண்டும்.

1080. “எற்றிற்கு உரியர் கயவர்ஒன்று உற்றக்கால்

விற்றற்கு உரியர் விரைந்து”.

கயவர் எதற்கு உரியவரென்றால் தமக்குத் துன்பம் வந்த போது அதைப் போக்கத் தம்மைப் பிறருக்கு விலையாக விற்று விடுவதற்கு உரியவர் ஆவர்.

வள்ளுவர் செய்நன்றி மறத்தல், பொறாமை கொள்ளல், சோம்பல் கொள்ளல், கர்வப்படல் ஆகியவற்றால் வரும் தீமைகளைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்.

அறியாமையாலும் ஆணவத்தாலும் தீய குணங்கள் உருவாகின்றன. அவற்றை ஒழித்து வாழக்கற்றுக்கொள்ள வேண்டும்.

உலகில் மிகக் கொடியது நம்பிக்கைத் துரோகமிழைத்தல். திட்டமிட்டு ஏமாற்ற வேண்டுமென நினைப்பவன் தனது செயல் வெற்றியடைந்துவிட்டதாக மகிழ்வான். ஆனால் ஏமாற்றப்பட்டவனின் இதயம் வெடித்துவிடும்; இரத்தம் உறைந்து இதயம் செயலற்றுவிடும். தீக்குள் வைத்த விறகாகிவிடும் அவனது மனது. அந்தத் துன்பத்தை வர்ணிக்க வார்த்தைகளே இராது. அதை அவன் சாகும்போது நினைத்தாலும் உடல் வேகும். நம்பியவனுக்குத் துரோகம் செய்பவனின் குடும்பம் வாழாது.

07) பொறுப்பான பதவிகளில் உள்ளவர்கள் எப்படிப் பணியாற்ற வேண்டும்?

நான் 1989ஆம் அண்டு அதிபராகக் கடமையேற்ற போது பயந்தேன். என்னைத் தைரியமூட்டிய நண்பர் ஒருவர் கூறியதை நான் 2005ஆம் ஆண்டு கல்விப்பணிப்பாளராகப்

பதவியுயர்வு பெற்றபோது நினைத்துப் பார்த்தேன். அவர் கூறிய சில விஷயங்களைக் கருத்தில் கொள்ளாமையால் தான் நான் அதிபராக இருந்து பதவியுயர்வு பெற்ற இரண்டொரு வாரத்திலேயே பெருந்துன்பப்பட்டேன். அப்படி ஒரு துன்பத்தை நான் எனது வாழ்நாளில் பட்டது கிடையாது.

நண்பர் சொன்னார்; "ஆசிரியராக இருந்து, அதிபராகப் பதவியுயர்வு பெற்றுள்ளாய். யாழ்ப்பாணத்தில் 400 பாடசாலைகள் உள்ளன. 7500 மேற்பட்ட ஆசிரியர்கள் இருக்கிறார்கள். இவர்கள் எல்லோரும் கற்றவர்கள். அவர்களைவிட நீ பாக்கியம் செய்தமையால் தான் அதிபரானாய். உனது பாடசாலையில் 600 மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்கிறார்கள். 25 மேற்பட்ட ஆசிரியர்கள் பணிபுரிகின்றனர். எல்லோரையும் சமமாக நடத்து; உயர்வு தாழ்வு பாராதே; கடமை செய்பவர்களை மதி; எப்பொழுதும் உனது மனதில் பாடசாலையின் நினைவு இருத்தல் வேண்டும். பதவி ஊதியம் பெறுவதற்கானதல்ல. சேவை செய்வதற்குரியது என்பதை நினைவில் வைத்துக்கொள். அதிபர் பதவி புனிதமானது. சமூதாயத்தின் நன்மைக்காக அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டியது. உனது சுயநலன்களைத் துறந்து மாணவர்களின் எதிர்காலம் சிறப்புற நீ கடமை செய்தல் வேண்டும்".

மாணவர்களை உனது பிள்ளைகளாகக் கருதவேண்டும். ஆசிரியர்களுக்குக் கௌரவமளித்து, அவர்கள் மகிழ்வுடன் கடமையைச் செய்யக்கூடிய சூழ்நிலையை உருவாக்குதல் வேண்டும். நீ செய்யும் கடமையால் ஏற்படும்

புகழ்தான் நீ பதவி பெற்றதற்கான ஊதியமாக இருத்தல் வேண்டும்.

“நிர்வாகத்தை உனக்கு யாரும் சொல்லித்தரமாட்டார்கள். அதைப்பற்றிச் சுற்று நிருபங்கள் வரும். சட்டத்தை விட்டுவிட்டு மனிதாபிமானத்தைப் பார். புத்தகங்களும், சட்டங்களும் அனுபவங்களைத் தராது. புத்தகத்தில் படித்தவற்றை நடைமுறைப்படுத்தினால் உனது ஆளுமைக்கு வேலை இராது. சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்றவாறு நடந்து கொள்ளக் கற்றுக்கொள்”.

“பதவி உயர்வை நினைத்துக் கர்வப்படாது பெறும் சம்பளத்திற்கு வேலை செய்கிறேனா எனத்தினமும் நினைத்துப்பார். இல்லாவிட்டால் பாவம் ஏற்படும்”.

“வேலையை மனப்பூர்வமாக மகிழ்வுடன் செய். ஒவ்வொரு மாணவனையும் கவனிக்கவேண்டும். ஒவ்வொரு ஆசிரியர்களையும் மேற்பார்வை செய்தல் வேண்டும். அவர்களுடன் கண்ணியமாக நடந்து கொள்ளவேண்டும். மேலதிகாரிகளுடன் அன்புடனும் மதிப்புடனும் நடந்துகொள்ள வேண்டும். அபிப்பிராயபேதங்கள் ஏற்படுமிடத்து அதை உடனே தீர்க்கவேண்டும் என்று நினைக்கக்கூடாது. அப்படி நினைத்தால் இருபகுதியினருக்குமிடையில் கருத்து வேறுபாடு ஏற்பட்டுத் தீராத முரண்பாடாகிவிடும். இரண்டொரு தினங்களில் யார் மீது தவறு இருக்கிறதென்பது தானாகப் புரியவரும். சிலசமயம் அதிகாரியான உன்னிடமே தவறு இருக்கலாம்”.

“மாணவரின் பெறுபேற்றில் வீழ்ச்சியேற்பட்டால் அதற்கான சரியான காரணங்களை ஆராய்ந்து அடுத்தமுறை வீழ்ச்சி ஏற்படாதவாறு கவனித்துக் கொள்ளல் வேண்டும்”.

“எதற்கும் அரச உதவியை எதிர்பாராது பழையமாணவர்கள், நலன்விரும்பிகள், வெளிநாட்டு நிறுவனங்களின் உதவியைப் பெற்றுத் திட்டங்களை நடைமுறைப்படுத்தல் வேண்டும்”.

“எல்லாவற்றையும் விட மனிதநேயத்துடன் நடந்து கொள்ளல் வேண்டும். உன்னுடைய செயல்கள் தான் மதிக்கப்படுவன என்பதை நீ ஒருபோதும் மறக்கக்கூடாது. பாடசாலையின் தேவை, மாணவர்களின் கல்வி அபிவிருத்தி, பௌதீகத்தேவைகள் போன்றவற்றை இலட்சியமாகக் கொண்டு பாகுபாடில்லாமலும் தகுதியற்றவர்களின் ஆலோசனைகளைக் கேளாமலும் பணியாற்று, வெற்றி கிடைக்கும்”

“உண்மைதான். நண்பன் கூறிய யாவற்றையும் அக்கறையுடனும், அர்ப்பணிப்புடனும் செய்த நான், நண்பன் கூறிய கடைசி உபதேசத்தைக் கைக்கொள்ளவில்லை. தகுதியற்ற ஒருவரை அறிவுள்ளவராகக் கருதி அவரிடம் பொறுப்புக்களை ஒப்படைக்க, அவர் தனது மனதில் ஒரு திட்டத்தை உருவாக்கிச் செயற்பட்டார். அது நான் பதவி உயர்வு பெற்றுச் சென்ற பின்பே எனக்குத் தெரியவந்தது”.

“அந்த ஒரு தவறை இனிச் செய்யக்கூடாதென்ற நினைவு எனது மனதில் இப்போது உருவாகியுள்ளது. காலங்கடந்த அனுபவமானாலும் எதிர்காலத்திற்கு உதவும்”.

“எப்பொழுதும் தமது காரியங்களைச் செயற்படுத்த ஒவ்வொருவரும் நடிப்பார்கள். சிலரின் நடிப்பைக் கண்டு பிடிக்கவே முடியாது. அப்படியானவர்களால் தான் பெருந்தீமை வரும். தீமை செய்பவர்கள் அத்தீமைகளாலேயே அழிவார்கள். வள்ளுவன் அழகாக இருவேறுபட்ட முறையில் இதைக்கூறியுள்ளான்.

314. “இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்”.

ஒருவன் தனக்குத் தீமைகள் பல செய்தால் அவனைத் தண்டிப்பதென்பது, அவன் வெட்கப்படும் படி அவனுக்கு நல்லுதவிகள் பல செய்தலாகும்.

829. “மிகச்செய்து தம்எள்ளு வாரை நகச்செய்து
நடபினுள் சாப்புல்லல் பாற்று”.

வெளியே சிறந்த நண்பரைப் போல நடித்துக் கொண்டு உள்ளத்தில் இகழ்கின்றவரை, நாமும் அது போலவே வெளியே சிரித்துப் பேசி அவர்களின் தொடர்பை அறுக்கும் வகையில் நடந்து கொள்ளல் வேண்டும்.

தீமை செய்பவர்களுக்கும் நன்மை செய்யவேண்டும். என்று கூறிய வள்ளுவர் பின் எப்படி நடக்கவேண்டும் என்றும் கூறுகிறார். குறள்தான் வாழ்க்கை.

319. “பிறர்க்கு இன்னா முற்பகல் செய்யின் தமக்குஇன்னா

பிற்பகல் தாமே வரும்''.

ஒருவன் முற்பகலில் மற்றவர்களுக்குத் துன்பங்களைச் செய்தால், அத் துன்பங்கள் பிற்பகலில் தாமாகவே வந்து அவனைச் சேரும்.

08) விநாயகரைத்தான் முதலில் வணங்கவேண்டும். விநாயகர் தான் மக்களோடு மக்களாக இணைந்து வாழ்பவர். அவர் குளக்கரையிலும் இருப்பார். மரநிழலிலும் இருப்பார் அவரை வணங்குவோர் எல்லாப் பயன்களையும் பெறுவார்கள் என்ற நம்பிக்கை மக்களிடம் இருக்கின்றது. அப்படியானால் மற்றைய தெய்வங்களை வழிபடத்தேவையில்லையா...? கல்விக்குக் கலைமகள் என்றும் செல்வத்திற்குத் திருமகள் என்றும் வீரத்திற்குத் துர்க்கையென்றும் ஏன் பிரித்து வைத்துள்ளனர்?.

''ஏகம் ஏவா அத்விதிபம் பிரம்மா'' என்று வேதம் சொல்கிறது. இதன் அர்த்தம் 'கடவுள் ஒருவனே' என்பது. நான்கு வேதங்களும் கடவுள் ஒருவன் என்பதைச் சொல்வதோடு அவரின் வடிவங்கள் பல என்கின்றன. அவைதீக சமயங்கள் கடவுளை ஏற்றுக்கொள்வதில்லை. 'கடவுள் உலகைப்படைக்கவும் இல்லை' என்கின்றன. இந்து சமயம் கடவுளைக் குடும்பத்தவனாக்கி, குடும்பத்தலைவன் தனது பொறுப்புக்களைப் பகிர்ந்தளிப்பது போலப் பகிர்ந்தளித்துள்ளது.

'ஓம்' என்பது பிரணவத்தின் வடிவம் பிரமம் என்று முதல் மூன்று வேதங்களும் கூற, அதர்வண வேத

உபநிடதமான மாண்டூக்கியம் பிரமம் சிவன் என்று சொன்னது. புராணங்கள் பிரணவ மகா மந்திரமான "ஓம்" என்பது யானை முகங்கொண்ட பிள்ளையாரெனக்கூறி, பிள்ளையார் சிவனின் மூத்த மைந்தன் என்றும், பிள்ளையாரை வணங்காது செய்யும் எச்செயலும் முடிவுறாது என்றும் கூறுகின்றன. அதனால் விக்னேஸ்வரர் என்னும் பெயரைப் பிள்ளையார் பெற்றார். பிரம்ம ஞானத்தைப் பரப்ப வேதகாலத்தின் பின் இந்நிலை மேற்கொள்ளப்பட்டமையால் மக்கள் விக்னேஸ்வரனை வணங்கிவிட்டுச் செயல்களைத் தொடங்குவது மரபாகிவிட்டது.

விநாயகருக்குக் கோயில் தேவையில்லை; அவரை எங்கும் வைக்கலாம். சாணம், அரிசி மா, மஞ்சள் மா, களிமண், கல் போன்ற எதனாலும் உருவாக்கலாம். அவரை வணங்கும் முறையும் மிகவும் இலகுவானது. மனதில் பிரணவ மந்திரத்தை ஓதிக்கொண்டு மூன்று அறுகம்புற்களை அவர்மீது இட்டாலே போதும். சர்க்கரை, பால், பழம், அவல் போன்ற சாதாரண உணவு வகைகளைப் படைக்கலாம்.

விநாயகரை யாரும் வணங்கலாம்; எப்படியும் வணங்கலாம்; தீட்டுத் துடக்குள்ள வீடுகளிலும் விநாயகரை வைத்து வணங்கலாம். உதாரணமாக மரணவீட்டில் கிரியைகள் செய்யுமுன் விநாயகரைச் சாணத்தில் பிடித்து வைத்த பின்பே கிரியைகளைத் தொடங்குவார்கள். இதனால் தான் விநாயகரை மக்களுடன் இணைந்து வாழ்பவர் என்னும், மக்களின் தெய்வம் என்றும் இலகுவாக வரங்களை அளிப்பவர் என்றும் கூறுகின்றனர்.

கடவுள் ஒருவர். அவர் சிவன். சிவன் தனது திருவிளையாடல்களின் போது ஏனைய கடவுள்களைத் தோற்றுவித்தார் என்கிறது புராணம். விநாயகர், முருகன், வைரவர், வீரபத்திரர் போன்றோர் சிவனின் மாறுபட்ட வடிவங்கள்.

சிவனுடைய ஒவ்வொரு அவதாரத்திலும் சக்தியும் அவதாரம் செய்கிறாள்.

சிவன் சொர்க்கநாதரானால் சக்தி மீனாட்சி.

சிவன் விசுவநாதனானால் சக்தி விசாலாட்சி.

சிவன் ஏகாம்பரேசுவரானால் சக்தி காமாட்சி.

சிவன் பிரகதீஸ்வரனானால் சக்தி பிரகதாம்பாள்.

சிவன் கோணேஸ்வரரானால் சக்தி கௌரி.

சிவன் கேதீஸ்வரனானால் சக்தி மாதுமை.

சிவன் நகுலேஸ்வரரானால் சக்திநகுலாம்பிகை.

இப்படிச் சிவன் ஒவ்வொரு தலத்திலும் தன்னையும் உமாதேவியாரையும் வெவ்வேறு உருவங்களாக்கியுள்ளது போலத் தாமே வடிவம் மாறி விநாயகராகவும், முருகனாகவும், வீரபத்திரனாகவும், வைரவராகவும் மாறுபடுகிறார். சக்தி

திருமகளாகவும் மலைமகளாகவும் கலைமகளாகவும் உருவெடுத்ததாகப் புராணங்கள் கூறுகின்றன.

எந்தத் தெய்வத்தையும் அன்புடன் வணங்க வேண்டும். நம்பிக்கையுடன் மனதை அர்ப்பணித்தல் வேண்டும். தெய்வத்தை வணங்குபவன் ஒழுக்கமான இல்வாழ்வு வாழவேண்டும். இறைவனை வணங்கிவிட்டுத் தீய செயல்களில் ஈடுபட்டால் பயன் இருக்காது. அசுரர்கள் இறைவனை வணங்கிப் பெற்ற வரங்கள் அனைத்தும் அவர்களது தீய செயல்களால் அழிந்த வரலாறு உங்களுக்குத் தெரியும். அதனால் கடவுள் பக்தி 50 சமவீதமாகவும் ஒழுக்கம் 50 சதவீதமாகவும் இருத்தல் வேண்டும்.

09) ஒருவனது செயல்தான் கன்மவினையாகி அவனைத் பிறவிகள் தோறும் தொடர்கிறது. கன்மவினைக்குத் தப்பமுடியாது. அப்படியானால் நாம் ஏன் கோயிலுக்குச் செல்லவேண்டும்? கடவுளை வணங்கவேண்டும்? இதனால் என்ன பயன் உண்டாகும்?.

சைவசித்தாந்தத்தில் உயிர்கள் செய்யும் செயல்களுக்கான பாவபுண்ணியங்களை உயிர்களுடன் இணைத்து வைப்பவர் கடவுள். செயலுக்கான பயன்கிடைத்தே தீரும். அதிலிருந்து தப்பமுடியாது. ஒரு பிராணியைக் கொன்றவன் அதை உயிர்ப்பிக்க முடிந்தால் அந்த கொலையின் பாவம் தீரும். அப்படி உயிர்ப்பிக்க முடியாது அதனால் அதன் பலனை அனுபவித்தே தீரவேண்டும். உலகை உனக்காதத்தான் இறைவன் படைத்துள்ளார். நெறிமுறைகளுக்கேற்ப வாழ்பவன் நல்ல முறையில் வாழ்வான்.

கோயிலுக்குச் சென்று கடவுளை வணங்குபவன் பின் தீமையான செயல்களைச் செய்யமாட்டான். அதற்காகத்தான் கோயில்களில் பிரசங்கங்கள் நிகழ்த்தப்படுகின்றன. கோயிலுக்குச் சென்று பூசைகள் செய்வதில் எந்தப் பயனும் இல்லை. ஆனால் கோயிலுக்குச் சென்று வழிபடுவதன் மூலம் புதிய கன்மவினைகள் சேராமல் எம்மை நாம் காப்பாற்றிக் கொள்ளலாம்.

ஒரு ஆன்மா வினை முடியும்வரை பிறப்பெடுத்துக் கொண்டே இருக்கும். தீமைகளைத் தொடர்ந்து செய்யாமல் விடுவோமேயானால் கன்மவினைப்பயன் குறையும். அதனால் ஆன்மா விரைவில் இன்பமடையும். கோயில் வழிபாடு இறைவனை மனதில் இருத்தவும், இறைவன் குடிபுகுந்த மனதுள் தீயன நுழையாமல் தடுக்கவும் மட்டுமே உதவும். அத்துடன் கோயிலுக்குச் செல்பவன் சரிகைத் தொண்டுகள் புரியும் வாய்ப்பைப் பெறுவான். கடவுளுக்கு தொண்டு செய்பவன் பிற உயிர்களுக்குத் தீமையைச் செய்யமாட்டான் என்று மறைநூல்கள் கூறுகின்றன.

கோயிலுக்குச் செல்வதால் நிம்மதி ஏற்படுகிறது. ஆண்டவனைக் கண்டதும் பயமில்லாமற் போகின்றது. துன்பங்கள் யாவும் மனதைவிட்டு நீங்கிச் செல்வது போல் இருக்கும். அங்கு நடைபெறும் கிரியைகளில் மனம் லயிக்கிறது. தீபாராதனை நடக்கும் போது நாம் இறைவனிடம் வேண்டியவை யாவும் கிடைக்கும் என்ற நம்பிக்கை உண்டாகிறது. அதனால் வாழ்வில் பிடிப்பு ஏற்படுகிறது.

பிரார்த்தனைகளில் ஈடுபடுவதன் மூலம் துன்பங்களிலிருந்து மனம் சிறிது சிறிதாக விடுபடுகிறது. சிவசின்னங்களைத் தரிப்பதன் மூலம் பயம் அற்றுப்போம்.

பேய், பிசாசு, பில்லி, சூனியம் போன்றவை சிவசின்னங்களை அணிபவர்களைத் தீண்டாது என்ற நம்பிக்கை ஆதிகாலந் தொட்டே இருந்து வருகின்றது. இந்த நம்பிக்கை எம்மைத் துன்பங்களிலிருந்து விடுவிப்பதோடு தீய செயல்களைச் செய்ய விடாமல் தடுக்கின்றது.

நெஞ்சுக்கு நிம்மதி ஆண்டவன் சந்நிதியென்று எமது ஆன்றோர் உரைத்தது இதற்காகத்தான்.

25) ஆன்மாவுக்கும் கடவுளுக்குமான தொடர்பு மரணத்திற்குப் பின்பும் இருக்குமா...?

உடலுக்கும் கடவுளுக்குமான தொடர்புதான் மரணத்துடன் அற்றுப் போகும். பஞ்சபூதங்களினால் ஆன உடம்பிலிருந்து உயிர் பிரிந்ததும் உடலைத் தகனஞ் செய்கிறார்கள். பஞ்சபூதங்களிலாலான உடல் அக்கினியுடன் சங்கமமானதும் அது பஞ்சபூதங்களுடன் கலந்து விடுகின்றது. இந்த உடலைச் சிவமென நினைத்து கிரியைகள் யாவும் செய்த பின் தகனமிடுகிறோம். அத்துடன் உடலுக்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்பு அற்றுப்போய்விடும்.

ஆன்மா தனது கன்ம வினைக்கேற்ப பிறப்பெடுப்பதால் அது மீண்டும் கடவுளின் ஆளுகைக்கு உட்படுகிறது. உயிர் எந்தப் பிறப்பெடுத்தாலும் அதில் கடவுள் குடிபுகுந்து விடுவார். கடவுள் இல்லாத பொருள் உலகில்

எதுவும் இல்லை. கன்மவினையை அனுபவித்து முடிக்காத ஆன்மாக்கள் பல பிறவிகளை எடுக்கின்றன. கன்ம வினையை அனுபவித்து முடிந்த ஆன்மாக்கள் பிறப்பற்ற நிலைக்காட்படுகின்றன. பிறப்பில்லாத நிலை இறைவனை அடைந்த நிலையாகும்.

ஆன்மா இரண்டு நிலைக்குட்படும். ஒன்று இறைவனுடன் இரண்டறக்கலந்த நிலை, மற்றது உடலுடன் சேர்ந்த நிலை. இந்த இரண்டு நிலைகளிலும் இறைவனின் தொடர்பு ஆன்மாவுக்கு உண்டு.

10) வேதாந்தம் என்றால் என்ன? அதைப்பற்றிய விளக்கம் தேவை!

வேதாந்தம் என்பதைத் தெரிந்து கொள்ளவேண்டுமானால், அச் சொல்லின் அர்த்தத்தை முதலில் புரிந்து கொள்ளல் வேண்டும். வேதம் நான்கு. அவ்வேதங்களின் அந்தம் அதாவது வேதத்தின் முடிவுப் பகுதி அல்லது இறுதிப்பகுதி என்று தான் பொருள் கொண்டுள்ளனர்.

வேதங்களை ஏற்றுள்ள அவைதீக சமயங்கள் யாவும் வேதத்தின் இறுதிப் பகுதியான உபநிடதங்களை ஏற்றுள்ளன. வேதத்தில் உள்ள கிரியை முறைகளை ஏற்காத வைதீக சமயங்களும் கூட உபநிடதங்களை ஏற்றுள்ளன. சமணமும் பௌத்தமும் வேதத்தின் இறுதிப்பகுதியான உபநிடதங்களை ஏற்கவில்லை என்று பகிரங்கமாகக் கூறவில்லை.

இந்நிலையில் வைதீக சமயங்கள் யாவும் வேதாந்த சமயம் தான். அப்படியிருக்கும் போது சங்கர வேதாந்தம், இராமனுச வேதாந்தம், மத்துவ வேதாந்தம் என்று கூறுவது அவர்கள் உபநிடதங்களை ஆராய்ந்து தமது கருத்தை வேற்றுமைப்படுத்திச் சொன்னவிதம் தான்.

தெய்வம் தான் மனிதனைப்படைத்தது என்று வேதகால மக்கள் நம்பியிருந்தனர். தைத்திரிய உபநிடதம் இதை விளக்குகின்றது.

பிருகு முனிவர் தனது தந்தையான வருணதேவனிடம் இப்படிக் கேட்கிறார்; ‘‘தந்தையே! எனக்குப் பிரமம் பற்றி உபதேசிக்கவேண்டும்’’

வருணதேவன் பிரமஞானத்தைப் பற்றிய விளக்கம் கொடுத்துவிட்டு இறுதியாகக் கூறுகிறார்; ‘‘எதிலிருந்து எல்லாப் பொருட்களும் வெளியேறுகின்றனவோ; எல்லாப் பொருட்களும் எதனால் ஆக்கப்படுகின்றனவோ, அது தான் பிரமம்’’

இந்தப் பிரமத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்வது தான் வேதாந்தம். இந்த ஆராய்ச்சியை வைதீக சமயத்தினரும் அவைதீக சமயத்தினரும் செய்தனர்.

உபநிடதத்தில் கூறப்பட்ட பிரமம், ஆன்மா, உலகம் பற்றிய தெளிவை மக்களுக்கு எடுத்துக்கூறப் பலர் முயன்றார்கள். இவர்கள் எல்லோரும் தெளிவுக்குப் பதிலாகக் குளப்பத்தையே உண்டுபண்ணினர். இருப்பினும் ஒவ்வொரு மதத்தினரும் வேத உபநிடதங்களுக்குத் தாம் கொண்ட கருத்துக்கள்தான் உண்மையானவை என்று அறுதியிட்டுக் கூறுகின்றனர்.

வேதாந்தமாகிய உபநிடதப் பாடல்கள் பல ரிஷிகளால் பல நூறு ஆண்டுகள் இடைவெளிவிட்டுப் பாடப்பெற்றன. இந்த வகையில் ரிஷிகள் தமது அறிவுக்கெட்டிய படியே பாடினர். இதனால் தான் பிரமம், ஆன்மா, உலகு பற்றிப் பல்வேறு விதமான கருத்துக்கள் எழுந்தன. அவற்றுற்சில ஒத்தும் சில வேற்றுமைப்பட்டும் உள்ளன.

மாக்ஸ் முல்லர்; ‘‘கிறீஸ்து பிறப்பிற்கு 1200 வருடங்களுக்கு முன்பு முதல் வேதப்பாடல் உருவாகி இருக்கலாம்’’ என்கிறார்.

இந்திய அறிஞர் திலகர்; ‘‘கி.மு 4000 ஆண்டுகளுக்கு முன்பே வேதப்பாடல்கள் உருவாகிவிட்டன’’ என்று கூறியுள்ளார்.

வியாசமுனிவரே வேதங்களைத் தொகுத்து நான்காகப் பிரித்தவர். அதனால் அவர் வேதவியாசர் என்று அழைக்கப்பட்டார். அவர் மகாபாரதத்தை எழுதியவர். பாரதயுத்தம் கி.மு 1900 வருடங்களுக்கு முன் நடைபெற்றதாகக் கூறப்படுகிறது. அத்துடன் பாரதப் போரில் உபதேசிக்கப்பட்ட பகவத்கீதையையும் உபநிடதமாகவே இந்துக்கள் கொள்கின்றனர். இதன் மூலம் ரிக்வேதம் கிறிஸ்து பிறப்பதற்கு 3000 ஆண்டுகளுக்கு முன்பே தோன்றியிருக்கலாமென ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.

பல ரிஷிகளால் பல்லாண்டுகளாகப் பாடப்பெற்ற உபநிடதப் பாடல்களை ஒவ்வொருவரும் விளங்கிக் கொள்வதில் காணப்பட்ட முரண்பாடுகளும், ஒவ்வொருவரும் அளித்த விளக்கங்களும் முரண்பட்டே இருந்தன.

மூலப்பொருள் ஒன்றா....? பலவா...? என்பதில் பெரும் முரண்பாடு உபநிடதங்களில் காணப்படுகின்றது.

மூலப்பொருள் சித்தா...? அல்லது சித்தும் சடமுமா...? என்பதிலும் பல முரண்பாடுகள் உள்ளன.

உலகம் எப்படி உருவானது என்பதிலும் பலமுரண்பாடுகள் உள்ளன.

பிரமத்திற்கும் ஆன்மாவிற்கும் உலகிற்கும் ஒவ்வொரு உபநிடதமும் ஒவ்வொரு கருத்தை முன்வைக்கின்றது.

பிரமமும் உலகமும் ஒன்றென்றும், அவை இரண்டும் வெவ்வேறு என்றும் கூறுகின்றன. இதைச் சீராக்க முயன்ற சங்கரரும் முரண்பட்ட கருத்துக்களையே சொன்னார்.

“பிரமம் தானாயும் ஒன்றாயும் உள்ளதே உண்மை; வேறாகவும் பலவாகவும் காணப்படுவது தோற்றம்” இது தான் சங்கரது விளக்கம்.

இதை அவர் விவர்த்த வாதம் மூலம் நிரூபிக்கிறார்.

ஒரு பொருள் இன்னொரு பொருளாக மாறாமலிருக்க மாறிவிட்டதாகக் காணப்படுவதற்கு விவர்த்த வாதம் என்று பெயர். இதற்கு உதாரணமாகக் கயிறு பாம்பாகக் காணப்படுவதை அவர் குறிப்பிடுகிறார். கயிறு பாம்பாக மாறாமல் இருக்கும் போது அதைப் பாம்பாக மாறிவிட்டதாகக் கருதப்படுகிறது. இதைப்போலவே பிரமமும் உலகாக மாறாதிருக்கும் போது மாறிவிட்டதாகக் கருதப்படுகிறது. இதன்படி காரணம் உண்மை காரியம் பொய். பிரமம் உண்மை. மாறியதாகிய உலகம் பொய்.

இதிலும் இடர்பாடு உண்டு. உண்மையில் இருந்து எப்படி உண்மையில்லாதது தோன்றும். பின் எப்படி உண்மையில்லாதது உண்மையாக மாறும்.

சங்கரருக்கு முன் இருந்த வேதாந்திகள் சங்கரருக்கு மாறான கொள்கையையே கொண்டிருந்தனர். அவர்களுடைய கொள்கைப்படி பிரமம் உண்மையாகவே மாறி உலக சிருஷ்டியை நிகழ்த்துகின்றது. இதைப் 'பரிமாணம்' என்று கூறுவர். இதற்கு உதாரணமாகப் பால் மாறித் தயிராகிறது என்றும், இதில் காரணமும் உண்மை காரியமும் உண்மை என்றும் கூறினர். இதிலிருந்து பிரமமும் உலகமும் உண்மை என்றும் கூறினர்.

பௌத்தர்கள் சூனிய வாதம் என்ற வாதத்தை முன்வைக்கின்றனர். இப்படி ஒவ்வொரு சமயத்தினரும் ஒவ்வொரு கருத்தைக் கொண்டுள்ளனர்.

வேதாந்திகள் பொருளை மூன்று வகையாகப் பிரிக்கின்றனர். முதற் பிரிவு "சத்" இது என்றுமே உள்ள பொருள். இதற்குள் பிரமம் மட்டுமே அடங்கும். இரண்டாவது பிரிவு உலகில் இல்லாத பொருட்கள். இதை அசத்து என்று கூறுவர். முயற்கொம்பும் மலடியின் மகனும் இப்பிரிவினுள் அடங்கும். இரண்டிற்கும் இடையில் உள்ளது உலகம். இது சத்தும் அல்ல அசத்தும் அல்ல. அது சதசத்து என்று கூறுகின்றனர்.

ஆன்மாவைப்பற்றியும் பிரமத்தைப் பற்றியும் பேசும் போது வேதாந்திகள் பன்மையை மறந்து ஒருமையை நிலைநாட்டுவதே அவர்களது குறிக்கோளாகும். ஒரேயொரு மூலப்பொருளான பிரமமே சீவன்களாகிறது. இரண்டும்

அடிப்படையில் ஒன்று. வேதாந்திகள் பிரமத்தைப் பரமாத்மா என்றும் சீவன்களை ஜீவாத்மா என்றும் கொள்வார். இதற்கு உதாரணமாக வெண்நிறப்பூவை செந்நிறக்கண்ணாடியில் பார்த்தால் அப்பூ செந்நிறமாகவே தோன்றும். கயிறு பாம்பாகத் தோன்றும் போது பிரமம் உலகமாகத் தோன்றுவதைக் குறிப்பது போல, வெண்நிறப்பூ செந்நிறமாகத் தோன்றுவது பிரமம் சீவனாவதைக் குறிக்கின்றது. பொருள் ஒன்றாக இருந்து அதன் இயல்பு மாறுபடுவதிலிருந்து பிரமமும் சீவனும் ஒன்று தான் என்று வேதாந்திகள் விளக்குகின்றனர். இதைத்தான் உபநிடதங்கள் ‘‘தத்துவமசி’’ ‘‘அகம் பிரம்மாஸ்மி’’ என்று கூறுகின்றன. தத்துவமசி என்றால் ‘அது நீயாக இருக்கிறாய்’’ ‘‘அகம் பிமாஸ்மி’’ என்பதன் பொருள் ‘‘நான் பிரமம்’’ என்பதாகும். இவ்வாக்கியங்கள் பிரமமும் சீவன்களும் ஒன்று என்பதையே குறிக்கிறது என்கிறார் சங்கரர்.

பிரமம் உலகமாகவும், சீவனாகவும் மாறக் காரணம் மாயை என்று வேதாந்திகள் கூறுகின்றனர். வேதாந்திகள் கூறும் இந்த மாயை ஒரு கருத்தில் மட்டும் வழங்கப்படவில்லை. மாறுதலடையாத பொருளில் இருந்துதான் மாறுதலடையும் இவ்வுலகம் தோன்றியது. நிலையான பொருளில் இருந்து தான் நிலையற்ற உலகம் தோன்றியது; இயங்காத பொருளில் இருந்து தான் இயங்குகின்ற பொருள் தோன்றியது. நிலையான மாறுதலடையாத இயங்காத பொருளே பிரமம்.

பிரமத்தில் இருந்து உலகம் தோன்றும் போது பிரமம் பாதிக்கப்படமாட்டாது. இதையே மாயை என்ற பதம் விளக்குகிறது. மாயையின் இன்னொரு வடிவம் பினவருமாறு;

“மாயை எல்லை இல்லாதவற்றை எல்லைப்படுத்தும்; உருவம் இல்லாதவற்றை உருவப்படுத்தும். பூரணத்துவமுடைய பிரமத்தின் பூரணத்துவத்தைக் குறைப்பதும் மாயை. பூரணத்துவம் குறைந்த பிரமம் தான் ஈஸ்வரன்”.

வேதத்தில் பிரமம் இருவேறு நிலைக்குட்படுகிறது. முதலாவது மாயையோடு சேர்ந்த நிலை. அடுத்தது மாயையோடு சேராதநிலை. இதை வேதாந்திகள் “நிர்க்குணப் பிரமம்” என்பார். இப்பிரமம் குணங்களோடு சேரும் போது “சகுணப்பிரமம்” ஆகிறது.

சைவசித்தாந்திகளும் வேதாந்திகளும் இந்த இடத்தில் முரண்படுகின்றனர். சைவசித்தாந்திகள் ஈஸ்வரனுக்கு மிகமுக்கிய இடத்தைக்கொடுக்கின்றனர். சைவசித்தாந்தத்தில் ஈஸ்வரனே மிக உயர்ந்த பொருள், பரம் பொருள். வேதாந்திகள் பிரமத்திற்கே முதன்மை இடம் கொடுகின்றனர்.

வேதாந்தத்திலும் சித்தாந்தத்திலும் ஈஸ்வரனின் தொழில் படைத்தல் தான். ஆனால் இரண்டு படைத்தலுக்கும் பாரிய வேறுபாடுகள் உண்டு. வேதாந்தத்தில் உண்மையான பொருள் ஒன்று, அது உண்மையான உயர்ந்த மேலான நிலை. ஒரு பொருள் பலவாவது பொய்நிலை. இதைச் சிருஷ்டி என்று சொல்லலாம். இதைச் செய்பவன் தான் வேதாந்த ஈஸ்வரன்.

ஆனால் சித்தாந்தம், பொருள்கள் பலவென்று கூறுகிறது. அத்துடன் உயிர்களின் நலனுக்காக ஈஸ்வரன்

மாயையுடன் சேர்ந்து தனுகரண புவன போகங்களை உண்டாக்குவதே சிருஷ்டி என்று கூறுகிறது.

வேதாந்தப்படி சிருஷ்டி உண்மையல்ல; பயனுள்ளதல்ல; ஆனால் சித்தாந்தப்படி சிருஷ்டி உண்மையானது; பயனுள்ளது. மாயை உள்ளதை மறைக்கும்; இல்லாததைத் தோற்றுவிக்கும். மறைக்கும் சக்திக்கு ஆவரணம் என்றும், வேதாந்ததினுலிருக்கும் சக்திக்கு விஷேபம் என்றும் வேதாந்திகள் கூறுவர். இம்மாயையானது ஆவரண சக்தியால் பிரமத்தை மறைத்து விஷேசசக்தியால் உலகைத் தோற்றுவிக்கிறது.

மாயைக்கு அடுத்ததாக மாயையோடு சேர்ந்த அவித்தை என்ற பதத்தையும் வேதாந்திகள் கூறுகின்றனர். வித்தை என்பது அறிவு; அவித்தை என்பது அறியாமை. பிரமத்தை ஈஸ்வரனாக்குவது மாயை. சீவர்களுக்குரியது அவித்தை. மாயையும் அவித்தையும் பிரம்மத்திற்குப் புறம்பானவையல்ல. இரண்டும் பிரமத்துக்குள்ளேயே தோன்றிப் பிரமத்தை ஈஸ்வரனாகவும் சீவன்களாகவும் உருமாறக் காரணமாக இருப்பவை. மாயை ஈஸ்வரனைப் பாதிப்பதில்லை. ஆனால் அவித்தை சீவர்களைப் பாதிப்பிற்குள்ளாக்கும். இதுவே இரண்டிற்குமுள்ள வேற்றுமையாகும். பிரியாது இருக்கும் போது மாயையாகவும், பிரிந்து ஒவ்வொரு சீவனையும் பாதிக்கும் போது அவித்தை என்றும் மாயை பெயர்பெறும்.

வேதாந்திகள் ஏகமான பிரமத்தை அடையாத மோட்சம் என்றும், பிரமத்தை அடைய ஞானமே முக்கியவழியென்றும் கருதினர். பிரம்மத்தை அடைய இறைவழிபாடுகளும் கிரியைகளும் நல்லொழுக்கமும்

துணைசெய்யும் என்று சங்கரர் தோத்திரங்கள் மூலம் விளக்குகின்றார்.

11) வேதாந்தமான உபநிடத வாக்கியங்களைப் புரிந்து கொள்ளாது ஒவ்வொருவரும் தமக்கெட்டியபடியே உரை எழுதியுள்ளனர். சங்கரர் எழுதிய உரைக்கும் மற்றவர்கள் எழுதிய உரைக்கும் முரண்பாடுகள் இருக்கின்றனவே.

வேதப்பாடல்களைப் பாடியவர்களே அதற்கான உரைகளையும் எழுதியிருந்தால் இப்படியான பிரச்சினைகள் எழாது. உதாரணமாகத் திருக்குறளில் உள்ள பலபாடல்களுக்கான உரை தெளிவில்லாமலே இருக்கிறது.

55. ‘‘தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்

பெய்எனப் பெய்யும் மழை’’.

தெய்வத்தைப் போல தனது கணவனை மதித்து நடக்கும் பெண் பெய் என்று சொல்லும்போது பெய்யும் மழைக்கு ஒப்பானவள் ஆவாள்

85. ‘‘வித்தும் இடல்வேண்டும் கொல்லோ விருந்துஓம்பி

மிச்சில் மிசைவான் புலம்’’.

விருந்தினரைப் போற்றி உணவளித்து எஞ்சிய உணவை உண்டு வாழ்கின்றவனுடைய நிலத்தில் வித்திடாத இடமும் விளைச்சலைக் கொடுக்கும்.

இவ்விரு குறள்களுக்கும் உரையாசிரியர்கள் பல்வேறு விதமான உரைகளைக் எழுதியுள்ளனர். அதைப்போலத்தான் உபநிடதங்களுக்கு உரை கூறியோரும் பல்வேறு விதமாகக் கூறியுள்ளனர்.

குருவுக்கும் சீடர்களுக்குமிடையே நடந்த உரையாடல்கள் தான் உபநிடதங்கள். இவ் உரையாடல்களில் ஈடுபட்ட குருவும் சீடர்களும் பலதரப்பட்டவர்கள். சில இடங்களில் கணவன் குருவாகவும் மனைவி சீடராகவும் இருப்பதைக் காணமுடிகிறது. சில உபநிடதங்களில் தந்தையும் மகனும் குருவும் சீடனாகவும், சில இடங்களில் யமன் குருவாகவும் சீவன் சீடனாகவும் இருப்பதைக் காணலாம்.

உபநிடதங்கள் பிரமம், ஆன்மா, உலகம் ஆகிய மூன்றைப்பற்றியும் விளக்குகின்றன.

ஆரம்பத்தில் உடல்தான் ஆன்மா என்று இந்திரனுக்கும் அசுரர் பிரதிநிதியான விரோசனனுக்கும் பிரஜாபதி கூறுகின்றார். இதில் திருப்திப்படாத இந்திரன் பிரஜாபதியை வினவ பிரஜாபதி; ‘‘வண்டியில் கட்டப்பட்ட குதிரையைப் போல ஆன்மா உடலில் கட்டப்பட்டு நிற்கிறது’’ என்று கூறுகிறார்.

பிரமம் பற்றிக்கூறுவதானால்; சொல்லால் பிரமத்தைப் பற்றி விபரிக்க முடியாது. எதிலிருந்து எல்லாப் பொருட்களும் வெளியேறுமோ, எதனால் எல்லாம் காக்கப்படுமோ, எதில் கடைசியில் எல்லாம் திரும்பிவிடுகிறதோ அது தான் பிரமம்.

உபநிடதத்திற்கு உரையெழுதியவர்களுள் மிகவும் முக்கியமானவர் சங்கரர். இவரைத் தவிர

உபநிடதத்திற்கு இராமனுஜரும் மத்துவரும் உரையெழுதியுள்ளனர்.

உள்ளது ஒரு பொருள். அது பிரமம். பிரமம் மாயையோடு சேர்வதால் உலகம் தோன்றுகிறது. பிரமம் அவித்தையுடன் சேர்வதால் சீவன்கள் தோன்றுகின்றன. பிரமம் பரமாத்மாவென்றும், சீவன்கள் சீவாத்மா என்றும் அழைக்கப்படும். உலகமும் ஆன்மாவும் பொய். உள்ளது ஒரே ஒரு ஆத்மா என்று சங்கரர் கூறுகிறார்.

ஆனால் இராமனுஜர் பிரமமும் ஆன்மாவும் உலகமும் உண்மைப் பொருள்கள் என்றும் இறைவன் உலகிற்குள்ளும் உயிர்களுக்குள்ளும் அந்தர்யாமியமாய் நின்று இயக்குகிறார் என்று கூறுகிறார்.

இராமனுஜர் பிரமத்தை முதன்மைப்படுத்தி ஏனையவற்றை பிரமத்தின் சரீரமாக்கி பிரமத்தை சரீரியாக்கி குறிப்பிடுகின்றார்.

உயிரை இறைவனது உயிராக்கி இறைவனை அவ்வுடலுக்குரிய சரீர சரீரி சம்பந்தம் கொடுப்பது இராமனுஜரது முக்கியமான தத்துவமாகும்.

இந்த உலகம், உயிர்கள், இறைவன் ஆகிய மூன்றும் ஒரு பொருள். இப்பொருளுக்கு உயிர்களும் உலகும் அங்கங்கள். இறைவன் அங்கி. இத்தொடர்பைக் குறிக்க இராமனுஜர் ‘அப்பிரசித்தி’ என்ற பதத்தை உபயோகிக்கிறார். இதற்கு உதாரணமாகப் பழத்திலிருந்து சுவையைப் பிரிக்க முடியாது. என்கிறார்.

அடுத்து மத்துவரது தத்துவத்தைப் பார்த்தால் அது சங்கரரையும் இராமனுஜரையும் விடவேறுபடுகிறது.

மத்துவர், ஆன்மா வேறு இறைவன் வேறு, இவை இரண்டும் வேறு பொருட்கள்; இவை ஒரு போதும் ஒன்றாகமாட்டாது. என்கின்றார். அத்துடன் ஈஸ்வரன், சீவன், சடம் ஆகிய மூன்று பொருட்களும் என்றுமே உள்ளன என்றும், இவற்றுக்கிடையே ஐந்து பேதங்கள் உள்ளனவென்றும் கூறுகின்றார். இவர் இராமனுஜரைப்போல இறைவனும் உலகமும் உயிர்களும் உண்மையென்று கூறுகின்றார்.

பொதுவாக உபநிடதங்கள் பிரமம், ஆன்மா, உலகம் பற்றிக் கூறுகின்றன. இவற்றுக்கிடையே உள்ள தொடர்புகள் பற்றிக் கூறுகின்றன. இறைவனது நிலையைப் பற்றிக் கூறுகின்றன. உலகத்தின் நிலைாமையைப் பற்றிக் கூறுகின்றன. ஆன்மாக்களின் ஈடேற்றம் பற்றிக் கூறுகின்றன.

பொதுவாக நோக்கின் இறைவன் படைக்கப்படாதவன். சுயம்புலிங்கம் என்பது தானாகவே தோன்றியது. அதே போல இறைவனும் தானாகவே தோன்றியவன். அவன் அழிவில்லாதவன்; பற்றுப் பாசம் இல்லாதவன்; தானாகவே இயங்குபவன்; உலகம் முழுவதையும் இருள் தனது போர்வையால் மூடியுள்ளதைப் போல உலகையும் ஆன்மாக்களையும் மூடியுள்ளவன். ஒவ்வொரு உயிர்களுக்குள்ளும் இருப்பவன்.

உலகமும், சீவன்களும், இறைவனும் பொய்யான பொருளல்ல. இறைவன் உயிர்களுக்குள்ளும் உலகுக்குள்ளும் நீர்தாவரமான தாமரையைப் போல இருப்பான். தாமரை இலையில் எப்படி நீர் ஒட்டாதோ அதே போல உயிர்கள் மீது பற்றுவைக்காது இருப்பான்.

உலகில் தோன்றிய மதங்களும் ஆராய்ச்சியாளர்களும் உலகம் தோன்றிய நாள் முதல் இவ்மூன்று விடயங்களைப் பற்றியும் தர்க்கப்பட்டுக்கொண்டே இருக்கிறார்கள். பொதுவாக மக்கள் எல்லோரும் கடவுளால் தான் உலகம் படைக்கப்பட்டதென்றும், உயிர்களின் வேண்டுகோளிற்கிணங்கஇறைவன் உயிர்களின் துன்பங்களை போக்கி அவற்றிற்கு உதவி செய்கின்றார் என்றும் நம்புகின்றனர். அது தான் உண்மை.

பகவத்கீதை “பீஜம்மாம்சர்வ பூதானாம்” என்று சொல்கிறது. இதன் கருத்து; இறைவன் படைப்புக்கள் அனைத்திலும் அதன் விதையாக உள்ளான் என்பது. திருவள்ளுவர் தனது குறளில் இப்படிக் கூறுகிறார்.

1. “அகர முதல எழுத்தெல்லாம்; ஆதி

பகவன் முதற்றே உலகு”.

எழுத்துக்களெல்லாம் அகரத்தை அடிப்படையாகக் கொண்டிருப்பதைப் போல உலகம் கடவுளை அடிப்படையாகக் கொண்டது.

தமிழ் வேதம் என்று சொல்லப்படுவது திருக்குறள். வடமொழியில் கூறப்பட்ட உபநிடதங்களின் தமிழ்மொழி பெயர்ப்பு அது.

350. “பற்றுக பற்றற்றான் பற்றினை; அப்பற்றைப்

பற்றுக பற்று விடற்கு”.

பற்றில்லாதவனாகிய இறைவனின் மீது மட்டும் பற்றுக் கொள்ளல் வேண்டும், உள்ள பற்றுக்களை விட்டொழிப்பதற்கு அப்பற்றைப் பற்றுதல் வேண்டும்.

359. ''சார்புஉணர்ந்து சார்பு கெடஒழுகின் மற்றழித்துச்

சார்தரா சார்தரும் நோய்''

எல்லாப் பொருள்களுக்கும் சார்பான செம்பொருளை உணர்ந்து, பற்றற்று வாழ்ந்தால், சார்வதற்குரிய துன்பங்கள் திரும்ப வந்து அடையாது.

உபநிடதங்கள் ஆன்ம ஈடேற்றத்தைப் பற்றிக்கூறுவன. அதை உரையாசிரியர்கள் யானையைக் கண்ட குருடர்களைப் போல விளக்கம் எழுதியுள்ளனர். அவற்றையெல்லாம் விட்டுவிட்டு; கடவுள் உலகையும், ஆன்மாக்களையும் படைத்தார். அவர் என்றும் ஆன்மாக்களுக்கு உதவுவார்'' என்ற நம்பிக்கையுடன் செயற்படவேண்டும்.

12) கடவுளுக்கு உருவம் இல்லையென்று பெரியவர்கள் கூறுகின்றனர். இந்நிலையில் உருவ வழிபாட்டால் பயன் உண்டா...?

வேதங்கள் பிரமத்திற்கு உருவம் கொடுத்துள்ளன. உபநிடதங்களை வேதாந்தம் என்று சொல்லப்படுகிறது. வேதங்கள் கூறும் பிரமத்தையே உபநிடதங்களும் பிரமமாக ஏற்கின்றன. அதனால் வேதத்தில் கூறப்பட்ட உருவ அமைப்புக்களைத் திரும்பவும் சொல்லத் தேவையில்லை என்று உபநிடதங்கள் கருதியிருக்கலாம்.

“ஓம்” என்ற பிரணவ மந்திரத்தில் எல்லாம் அடங்கியுள்ளது. நடந்தது, நடப்பது, நடக்கப்போவது ஆகிய கால வேறுபாடு அனைத்தும் இதன் வடிவம் என்று மாண்டூக்கிய உபநிடதத்தின் முதற்பாடல் சொல்கிறது. இந்த ஒலிக்கு புராணங்கள் ஒரு வடிவம் கொடுத்துள்ளன. அது யானை முகங்கொண்ட பிள்ளையாராகும். அத்துடன் ஹரன் என்ற பிரமம் சிவன் என்றும் மாண்டூக்கிய உபநிடதம் கூறுகிறது.

புராணங்கள் தான் கடவுளுக்கு உருவத்தைக் கொடுத்தது. வேத உபநிடதக் கருத்துக்களைப் புராணங்கள் சாதாரண மக்கள் விளங்கிக் கொள்வதற்காகக் கதைவடிவாகின.

வேதத்தில் கடவுளுக்குக் கூறப்பட்ட உருவ அமைப்புக்கள் பின்பு எப்படி இல்லாமற்போகும். கடவுளை உருவமற்றவன் என்றால் மனிதனால் அதை நினைக்கமுடியாமற் போய்விடும். தற்போது இறைவனுக்கு உருவம் கொடுக்கப்பட்டமையால் பிள்ளையார் என்றதும் ஓர் உருவம் மனதில் தோன்றிவிடும். அவ்வுருவத்துடன் பிள்ளையார் மனித மனங்களில் நிறைந்துவிடுவார். நாம் மனிதர்களில்லாத இடங்களில் நின்று கொண்டும் எமது குல தெய்வத்தை நினைத்தால் அவர் உடனே தனது உருவத்துடன் மனதில் புகுந்துவிடுவார். இதனால் இலகுவாக நாம் இறைவனை அடையமுடிகிறது.

சாதாரண மனிதர்கள் கடவுள் பக்தியில் குழந்தைக்குச் சமமானவர்கள். குழந்தைக்கு ஆரம்பத்தில் எதுவும் தெரியாது. பின் காட்சிகள் மூலம் தனது மனதில்

ஒவ்வொரு பொருளையும் பதிவு செய்கிறது. ஒரு பிள்ளைக்கு ஆட்டைக்காட்டி விட்டு எருமையைப் பற்றி விளக்கம் சொன்னால் அது எருமையின் உருவத்தைச் சரியாக மனதில் நிலைநிறுத்த முடியாது. அதுபோலத்தான் கடவுளின் உருவமும்.

ஒரு பழத்தின் சுவையை, அந்தப் பழத்தைச் சாப்பிடாதவர்களுக்கு எப்படிக் கூறமுடியாதோ அப்படிப்பட்டது தான் உருவமில்லாத வழிபாடும். உருவவழிபாடு தான் எம்மைக் கடவுளின் அருகே கொண்டு செல்லும்.

ஞானிகள் மட்டும் மனதில் நினைத்தவுடன் நினைத்த உருவில் கடவுளைக் காணமுடியும். ஆண்டாள் கண்ணனைக் காதலனாகக் கண்டாள். பாரதியார் கண்ணம்மாவாகக் கண்டார்.

பெண்ணின் உருவத்தைப் பார்த்த பின்பு தான் இளைஞன் ஒருவன் அவளைத் திருமணம் செய்யச் சம்மதிக்கிறான். எனவே உருவவழிபாடு தான் பயன்மிக்கது.

13) நன்மைகள் வரும் போது தனது கெட்டித்தனம் என்று கூறும் மனிதன் தீமைகள் வரும்போது கடவுள் விட்ட வழியென்று தத்துவம் பேசுகிறானே!

"நன்றும் தீதும் பிறர் தரவரா.." என்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ஈழத்துப் பூதந்தேவனார் என்ற புலவர் கூறியுள்ளார்.

நமது செயல்களால் தான் நன்மையும், தீமையும் வருகின்றன. செயல்களைச் செய்யும் போது நன்றாக ஆராய்ந்து இச்செயலைச் செய்யலாமா எனச் சிந்தித்து முடிவெடுத்த பின்பே செய்தல் வேண்டும்.

461. “அழிவதூஉம் ஆவதூஉம் ஆகி வழிபயக்கும்
ஊதியமும் சூழ்ந்து செயல்”.

ஒரு செயலால் வரும் அழிவையும், ஆக்கத்தையும் நன்கு ஆராய்ந்து அறிந்த பின்பே செயலில் ஈடுபடல் வேண்டும்.

429. “எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை
அதிர வருவதோர் நோய்”.

வரப்போகும் துன்பத்தை முன்னே அறிந்து தம்மைக் காத்துக் கொள்ள வல்ல அறிவுடைய பெரியவர்களுக்கு, அவர் நடுங்கும் வண்ணம் எந்தத் துன்பமும் வரமாட்டாது.

451. “சிற்றினம் அஞ்சும் பெருமை சிறுமைதான்
சுற்றமாச் சூழ்ந்து விடும்.”

சிற்றினத் தோரைப் பெரியவர்கள் அஞ்சி ஒதுக்கி வைப்பார்கள். சிறியோர்கள் அவர்களைத் தமது சுற்றமாக எண்ணி அணைத்துக் கொள்வார்கள்.

462. “தெரிந்த இனத்தொடு தேர்ந்து எண்ணிச் செய்வார்க்கு
அரும் பொருள் யாதொன்றும் இல்”.

ஒரு செயலைச் செய்யத் தெரிந்தவர்களோடு நன்கு ஆலோசித்து, தாமும் நன்கு சிந்தித்துச் செயற்பட்டால் செய்ய முடியாத செயல் என ஒன்றும் இல்லை.

468. “ஆற்றின் வருந்தா வருத்தம் பலர்நின்று
போற்றினும் பொத்துப் படும்”.

தக்க வழியில் செய்யப்படாத செயலுக்குப் பலர் துணையாக நின்றாலும் அது முடிவடையாது குறையாகவே இருக்கும்.

மக்கள் எல்லோரும் திருக்குறளை எவ்வேளையிலும் கையில் வைத்திருத்தல் வேண்டும். திருக்குறள் மனித வாழ்வு முழுவதையும் மிகவும் அற்புதமாகக் கூறுகிறது. இன்பம் துன்பம் எது வந்த போதும் திருக்குறளை ஒரு முறை எடுத்துப் படிப்பது நல்லது.

ஒருவன் ஒரு தீமையான செயலைச் செய்தால் அது பற்றி அவனது பெற்றோர், நண்பர்கள், இனத்தவர்கள் எடுத்துக் கூறுதல் வேண்டும். இன்று கற்காதவர்களுக்கு நாம் அறிவுரைகள் கூறமுடியும். கற்றவர்கள் தம்மை மேதாவியென நினைக்கிறார்கள்.

எனது நண்பர் ஒருவர் இருந்தார். அவர் நான் சொல்பவை யாவற்றையும் வேதவாக்காக ஏற்பதாகக் கூறுவார். அதனால் அவருக்கு பெரும் பதவியொன்றைப் பெற்றுக் கொடுத்தேன். பதவியைப் பெற்றதும் தீய வழிகளில் நடக்கத்தொடங்கிவிட்டார். முதல் முறை சொன்னேன்; சிரித்துச் சமாளித்தார். இரண்டாம் முறை கண்டித்தேன். இனி அப்படி நடவாது என்றார். மூன்றாம் முறை அவரே சொன்னார்; “நான் செய்வதில் என்ன பிழையுள்ளது?” பதவியைப் பெறும் போது மகா கணபதி முன்னால் சத்தியஞ் செய்தவர் பலரின் முன் இப்படிக் கேட்டார். முதலாவது முறையில் அவரது வீட்டக்குச் செல்வதை நிறுத்தினேன். இரண்டாவது முறை அவருடன் பேசுவதை நிறுத்தினேன். மூன்றாம் முறை அவரது தொடர்புகள் அனைத்தையும் துண்டித்தேன்; “நான் இறந்தால் கூட எனது

மரணச் சடங்கில் கலந்து கொள்ளக்கூடாது'' என்று கண்டிப்புடன் கூறிவிட்டேன்.

448. ''இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்

கெடுப்பார் இலானுங் கெடும்''.

கண்டித்து அறிவுரை கூறவல்ல பெரியாரின் துணையில்லாத காவலற்ற அரசன், தன்னைக் கெடுக்கும் பகைவர்கள் எவரும் இல்லா விட்டாலும் கெடுவான்.

813. ''உறுவது சீர்தூக்கும் நட்பும் பெறுவது

கொள்வாரும் கள்வரும் நேர்''.

கிடைக்கப் போகும் பயனை அளந்து பார்க்கும் நண்பரும், அன்பை நினைக்காமல் பொருளை விரும்பும் விலை மாதரும், திருடர்களும் சமமானவர் ஆவார்.

நன்மைகள் பூர்வபுண்ணியப் பயனால் வரும் என்பார்கள்; அதிஷ்டத்தாலும் வரும் என்பார்கள்.

இது சுத்தப் பொய். பானையில் இருந்தால் தான் அகப்பையில் வரும். நாம் நல்ல செயல்களைச் செய்தால் தான் நல்ல பயன்கள் வரும். செயல்கள் மட்டுமல்ல நினைவுகளும் பயனைக் கொடுக்கும். விதி என்று எதுவுமில்லை. நாம் எதை விதைத்தோமோ அதைத்தான் அறுவடை செய்ய முடியுமே தவிர இன்னொன்றை அறுவடை செய்ய முடியாது.

''ஒவ்வொருவரும் அனுபவித்துக் கொண்டிருக்கும் இன்ப, துன்பங்கள் அவரவரின் செயல்களால் வந்தவை'' என்று எவன் நினைக்கின்றானோ அவன் கடவுளின் நிலையை அடைவான். பின் அவன் தீய செயல்களைச் செய்யமாட்டான்.

ஊழ் என்று ஒன்றிருக்கிறது. ஒரு பிறவியில் ஒருவன் செய்யும் செயல்களால் வரும் இன்ப துன்பங்களை அப்பிறவியில் அவன் அனுபவித்து முடிக்காவிட்டால் அவன் மீண்டும் மீண்டும் பிறப்பெடுப்பான். அனுபவித்து முடிக்காத கன்மமே ஊழாகும்.

வீட்டை அடைமானம் வைத்து வங்கியில் பணம் பெற்று, மாதாமாதம் ஒரு தொகைப் பணத்தைக் கட்டி வரும் ஒருவன் மரணமடைந்தால் அல்லது கடனைக் கட்டாது விட்டால் வங்கி அவனது காணியை விற்றுத் தனது பணத்தை எடுக்கும். இது போன்றது தான் ஊழ்.

379. “நன்றுஆம்கால் நல்லவாக் காண்பவர் அன்றுஆம்கால்
அல்லற் படுவது எவன்?”.

ஊழ்வினையால் நல்லவை நடக்கும் போது மகிழ்கின்றவர், அதே ஊழ்வினையால் துன்பங்கள் வரும்போது கலங்குவது ஏனோ?.

இறைவன் எண்குணத்தவன். அவை தன்வயத்தனாதல், இயல்பாகவே பாசங்களிலிருந்து நீங்குதல், பேரருள் உடைமை, முடிவில் ஆற்றல் உடைமை, வரம்பில் இன்பம் உடைமை, இயற்கை உணர்வின் ஆதல், முற்றும் உணர்தல். இதனால் இறைவன் யாரின் மீதும் பற்றுக் கொள்ளமாட்டான். அதனால் நன்மை, தீமைகளை அவன் அவர்களின் கர்ம வினைக்கேற்பவே கொடுப்பான். அதனால் துன்பம் வரும்போது கடவுள் விட்டவழியென்று தத்துவம் பேசுவதால் எந்த விதமான பிரயோசனமும் இல்லை.

நீர் வரும் வாய்க்கால் உடைப்பெடுத்தால் அதைச் சிரமப்பட்டுக் கட்டினால் தான் பயிர்களுக்கு நீர்

பாய்ச்சலாம். அது போலத் துன்பங்கள் வரும்போது அதை நீக்குவதற்கான வழிவகைகளைத் தேடவேண்டும். அதற்கு இறைவன் உதவுவான்.

14) ஒரு மனிதன் தினமும் கடைப்பிடிக்க வேண்டி மதக்கடமைகள் எவை?

நீங்கள் மதத்தைப் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?. மதம் என்பது காசு பறிக்கும் ஒரு நிறுவனம் என்றா நினைக்கிறீர்கள்?. மனிதனை ஒழுக்கமுள்ளவனாக்குவதும், ஒழுக்கமுள்ளவனைத் தெய்வத் தன்மைக்கு உயர்த்துவதும் தான் மதத்தின் கடமை. சுயநலமில்லாமல் வாழ்தல், மதவாழ்க்கை, நம்பிக்கையோடு வாழுதல் மதவாழ்க்கை; பிற உயிர்கள் படும் துன்பங்களைக் கண்டு இரங்குதல் மதவாழ்க்கை; உறவினர்கள், அயலவர்கள், நண்பர்களுடன் அன்னியோன்னியமாக வாழ்தல் மத வாழ்க்கை; கிடைத்ததைப் பகிர்ந்துண்டுவாழ்தல் மதவாழ்க்கை, விட்டுக் கொடுத்து வாழ்தல் மதவாழ்க்கை. இது தான் மதம். இதை உணர்வது தான் மெய் உணர்வு.

இந்த நிலையை அடைய மதங்கள் மனிதனுக்கு நாளாந்தக் கடமைகள் சிலவற்றை வகுத்துள்ளன.

தினமும் நாம் நீராடவேண்டும். தினமும் உடைகளைத் துவைக்க வேண்டும். சுத்தமான உணவை உண்ண வேண்டும்.

சமையல் பாத்திரங்களைத் துலக்குதல் வேண்டும். வீட்டைத்துப்பரவு செய்தல் வேண்டும். தினமும்

உடலுக்கு உறுதியானவற்றைச் செய்வது போல மனதிற்கு வலிமை கொடுக்கக் கூடிய பயிற்சிகளையும் தினமும் செய்தல் வேண்டும். அது உடற்பயிற்சியும் மனப்பயிற்சியுமாகும்.

யோகாசனம் செய்யலாம்.

இப்போது வைத்தியர்களிடம் சென்றால் நான்கு அல்லது ஐந்து மைல்கள் நடக்கச் சொல்கிறார்கள். இதை அருகில் உள்ள கோயிலில் செய்தால் கடவுள் வணக்கமாகவும் இருக்கும். பயிற்சியாகவும் இருக்கும்.

நீறு அணிதல் வேண்டும். தேவார திருவாசகங்களைப் பாடல் வேண்டும். இது குரல் பயிற்சி. இப்போது வைத்தியர்கள், பொறியியலாளர்களைவிட குரல் வளம் மிக்கவர்கள் தமிழ்நாட்டில் கூடுதலாக உழைக்கிறார்கள்.

நல்லவற்றை நினைக்கவேண்டும். நினைவு தான் செயல். ஒவ்வொருவரும் நல்லொழுக்கம் உள்ளவர்களாக வாழ்ந்தால் தான் உலகமும் சிறப்பும், தூய்மையும் உடையதாக இருக்கும். அதனால் காலையில் கடவுளை வணங்கும் ஓரிரு நிமிடங்களாவது நல்லவற்றைச் சிந்தித்தல் வேண்டும். பலர் இறைவனிடம் தமது எதிரிகளைத் தண்டிக்கும்படி வேண்டுகிறார்கள். எப்பொழுதும் தூய்மையுள்ளவர்களாக வாழப்பழகிக் கொள்ள வேண்டும்.

“நாம் நினைக்கும் ஒவ்வோர் எண்ணமும், நாம் செய்யும் ஒவ்வொரு செயலும் குறிப்பிட்ட ஒரு காலத்திற்குப் பிறகு சூட்சுமத்தன்மையை அடையும். பின்பு அது வித்து வடிவத்தைப் பெற்று மறைந்திருக்கும் நிலையில் நமது சூட்சுமம் சரீரத்தில் வீழ்கிறது. மீண்டும் சிறிது காலத்திற்குப்பிறகு அது வெளிப்பட்டு வந்து தனக்குரிய

பலன்களைத் தரும். இந்தப் பலன்களே மனிதனுடைய வாழ்க்கையை நிர்ணயிக்கின்றன. இவ்விதம் மனிதன் தனது வாழ்க்கையைத் தானே உருவாக்கிக் கொள்கிறான்.'' என்கிறார் விவேகானந்தர்.

சிறு கன்றாக இருக்கும் போது மரத்தை ஒழுங்காக வளர்க்க வேண்டும். அப்படி வளர்க்கப்படும் மரம்தான் நல்ல முறையில் வளர்ந்து நற்பயனைத் தரும். மனிதரும் அப்படியே. அதனால் குழந்தையாக இருக்கும் போழுதே மத அனுஷ்டானங்களை முறைப்படி அனுஷ்டிக்கப் பழக்க வேண்டும்.

வாழ்க்கை வேறு மதம் வேறு அல்ல. மதம் தான் வாழ்க்கை. வாழ்க்கை தான் மதம். வாழ்க்கை முறைகள் தான் மதஅனுட்டானங்கள். மத அனுட்டானங்கள் ஒருவனை ஒழுக்கமாக வாழவைக்கும்.

50. ''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்''.

அறநெறிக்குட்பட்டு இவ்வுலகில் வாழும் இல்வாழ்வான் வானுலகில் வாழும் தெய்வங்களைப் போல் போற்றப்படுவான்.

73. ''அன்போடு இயைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு
என்போடு இயைந்த தொடர்பு''.

அருமையான உயிருக்கு உடலோடு இணைந்து இருக்கின்ற உறவு, அன்போடு இணைந்து வாழ்ந்த வாழ்வின் பயன் என்று கூறுவர் பெரியோர்.

84. ''அகன்அமர்ந்து செய்யாள் உறையும் முகன்அமர்ந்து

நல்விருந்து ஓம்புவான் இல்.

முகமலர்வோடு விருந்தினரை வரவேற்று உபசரிக்கின்றவனது வீட்டில் மனமகிழ்வோடு திருமகள் வாழ்வாள்.

92. “அகன்அமர்ந்து ஈதலின் நன்றே முகன்அமர்ந்து

இன்சொலன் ஆகப் பெறின்”.

மனம் மகிழ்ந்து பொருள் கொடுப்பதைவிட முகமகிழ்ச்சியோடு இனிமையாகப் பேசுவதே நன்று.

95. “பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு

அணி;அல்ல மற்றுப் பிற”.

பணிவு உடையவனாகவும், இன்சொல் பேசுபவனாகவும் இருத்தலே ஒருவனுக்கு சிறந்த அணிகலனாகும். மற்றைய அணிகள் அணிகள் அல்ல.

111. “தகுதி எனஒன்று நன்றே பகுதியால்

பாற்பட்டு ஒழுகப் பெறின்”.

தன்னோடு தொடர்புடையவர்கள் யாராக இருந்தாலும் அவரோடு முறையோடு பொருந்தி நடந்தால் நடுவு நிலைமை என்று கூறப்படும். அது நன்மை பயக்கும்.

121. “அடக்கம் அமரருள் உய்க்கும்; அடங்காமை

ஆரிருள் உய்த்து விடும்”.

அடக்கம் ஒருவனை உயர்த்தி தேவர்கள் வாழும் சொர்க்க வாழ்வைத் தரும். அடக்கமின்மை பொல்லாத இருளடைந்த நரக வாழ்வைத் தரும்.

131. “ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்

உயிரினும் ஓம்பப் படும்”.

ஒழுக்கம் மேன்மையைத் தருவதால், ஒழுக்கத்தை உயிரிலும் மேலானதாகப் போற்ற வேண்டும்.

151. “அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை”.

நிலமானது தன்னை வெட்டுவோரையும் மன்னித்துத் தாங்கிக்கொள்வதைப் போல், தம்மை இகழ்வாரைப் பொறுப்பதே தலைசிறந்த பண்பாகும்.

161. “ஒழுக்காறாக் கொள்க ஒருவன்தன் நெஞ்சத்து
அழுக்காறு இலாத இயல்பு”.

ஒருவன் தனது நெஞ்சில் பொறாமை இல்லாமல் வாழும் இயல்பை ஒழுக்க நெறியாகக் கொள்ளல் வேண்டும்.

171. “நடுவுஇன்றி நன்பொருள் வெ.்.கின் குடிபொன்றிக்
குற்றமும் ஆங்கே தரும்”.

நடுவு நிலையை இல்லாமல் பிறரின் பொருளை ஒருவன் கவர நினைத்தால், அவனது குடி கெடுவதோடு குற்றமும் வந்து சேரும்.

182. “அறன் அழீஇ அல்லவை செய்தலின் தீதே
புறன் அழீஇப் பொய்த்து நகை”.

அறத்தை அழித்துப் பேசி தீயவற்றைச் செய்தலை விட, ஒருவன் இல்லாத இடத்தில் அவனைப் பழித்துப் பேசி நேரில் புகழ்ந்து பேசுதல் தீமையானதாகும்.

192. பயன்இல பல்லார்முன் சொல்லல் நயன்இல
நாட்டார்கண் செய்தலின் தீது

பலர் முன்நிலையில் பயனில்லாத சொற்களைப் பேசுதல், நண்பரிடத்தில் அறமில்லாத தீய செயல்களைச் செய்தலை விடத் தீமையானதாகும்.

வள்ளுவர் நல்லவற்றை மேற்கண்டகுறள்களில் கூறியுள்ளார். இவற்றை நாளாந்தக் கடமையாகக் கொள்ளலாம்.

15) நாம் செய்யும் நல்ல செயல்களின் பயன்கள் உடன் வந்து சேர்வதில்லை. இது ஏன்?

நாம் செய்யும் செயல்களின் பலன்கள் சேமிக்கப்படுகின்றன. அவை தேவையான நேரங்களில் வெளிப்பட்டு உதவுகின்றன. ஒவ்வொரு செயல்களுக்கும், அதைச் செய்யும் மனிதனுக்கும், அதைக் கவனித்துக்கொண்டிருக்கும் இறைவனுக்கும் தொடர்பு உண்டு.

ஒருவனுக்கு அவசரமாக ஒரு பொருள் தேவைப்படுகிறது. அவனுக்கு அந்தப்பொருள் அப்பொழுது தேவை என்று அறிந்தவர்கள் அவனைத்தேடி வந்து கொடுக்கிறார்கள். இது அவனது நல்ல செயலின்பலன். இன்னொருவனுக்கும் ஒரு பொருள் தேவைப்படுகிறது. அவன் ஊரூராகத் திரிந்து கேட்டும் யாரும் உதவவில்லை. இதுவும் அவனது செயலின் பலன்.

ஒரு குரு தனது சீடர்களுக்கு; "கடவுள் சீவன்களுக்கு எவ்வேளையிலும் உதவுவார்" என்று உபதேசித்தார்.

ஒரு நாள் அவர்கள் வீதியால் வரும்போது அந்நாட்டு அரசனின் பட்டத்து யானைக்கு மதம் பிடித்துவிட்டது.

யானைப்பாகன் யானையின் மேலிருந்து மக்களை விலகுமாறு கூறிக்கொண்டிருந்தான்.

எல்லோரும் விலகி நின்றனர். குருவினது சீடன் கடவுள் உதவுவார் என்று நினைத்து வீதியில் குறுக்கே நின்றான். அவனை யானை தூக்கி வீசிவிட்டுச் சென்றது.

சீடன் மனதேவதையுடன் குருவிடம் சென்று; ‘‘கடவுள் எனக்கு உதவவில்லை’’ என்றான்.

‘‘கடவுள் உதவியதை நீ கவனத்தில் கொள்ளவில்லை. யானைப்பாகன் சொன்னதைக் கேட்டிருந்தால் உனக்கு இக்கதி நேர்ந்திராது’’ என்றார் குரு.

இதே போல தான் செயல்களும். நல்லவற்றைச் செய்தால் பலனும் பாராட்டும் கிடைக்கும். தீயவற்றைச் செய்தால் தண்டனையும் அவமானமும் கிடைக்கும்.

நல்ல செயல்கள் விருட்சத்தைப் போன்றவை. அவை பயன் தரச் சிறிது காலஞ் சென்றாலும் அவை பயன்தரத் தொடங்கினால் தொடர்ந்து பலன்களைத் தந்துகொண்டே இருக்கும். தென்னை, மா, பலா போல. அம்மரங்களை நல்ல முறையில் பேணிப்பராமரிப்பது போல உள்ளத்தையும் தொடர்ந்து நல்ல முறையில் வைத்துக் கொள்ளல் வேண்டும்.

நல்ல செயல்களைச் செய்பவன் பலனை எதிர்பார்க்க மாட்டான். ஏனென்றால் பயனை எதிர்பார்ப்பவன் ஒரு போதும் நல்ல செயல்களைச் செய்வதில்லை. நல்ல செயல்களைச் செய்துவிட்டோம் பலன்கள் வரவில்லையே என்று எண்ணாது தொடர்ந்து நல்ல செயல்களைச் செய்து கொண்டேயிருங்கள். நன்மைகள் தாமாகவே உங்களைத்

தேடிவரும். உண்மை, அன்பு, நேர்மை ஆகியவற்றைக் கடைப்பிடித்துக் கொண்டு ஒரு நல்ல இலட்சியத்துடன் செயற்பட்டால் இன்பம் கிடைக்கும்.

ஒரு குழந்தை பிறந்ததும் நடக்குமா....? மிருகங்கள் குட்டி ஈன்றதும் உடனே துள்ளி விளையாடுகின்றன. அக்குழந்தை வளர்ந்து கல்வி கற்றுக் குடும்பஸ்தனாக எவ்வளவு காலஞ் செல்லும். இதே போன்றது தான் நல்ல செயல்களின் பயனும்.

651. "துணைநலம் ஆக்கம் தரூஉம் வினைநலம்

வேண்டிய எல்லாம் தரும்".

ஒருவனுக்கு வாய்த்த துணையின் நன்மை செல்வத்தைக் கொடுக்கும்; செய்யும் தொழிலின் நன்மை அவன் விரும்பிய எல்லாவற்றையும் கொடுக்கும்.

இக்குறள் மூலம் நல்ல செயல்களின் பலனைப் பற்றி வள்ளுவன் கூறுகிறான்.

16) கடவுளை நம்புவோர் காலநேரம், சகுனங்களைப் பார்க்கலாமா...?

திருஞானசம்பந்தரின் கோளறு பதிகத்தைப் படித்துவிட்டு எதையும் செய்யலாமென்று ஞானிகள் கூறுகின்றார்கள்.

"வேயுறுதோளி பங்கன் விடம் உண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்து, என்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி

சனி பாம்பு இரண்டும் உடனே
ஆசுஅறும்; நல்லநல்ல; அவை நல்லநல்ல
அடியார் அவர்க்கு மிகவே''

கோளறு பதிகத்தில் பதினொரு பதிகங்கள் உள்ளன. அதை மனனஞ் செய்து தினமும் ஓதிவந்தால் இடர்கள் யாவும் தீரும்.

சாதகப் பொருத்தம் பார்த்து நல்ல நேரம் பார்த்து ஓமம் வளர்த்துத் தாலிகட்டிய திருமணங்கள் பல விவாகரத்தில் முடிந்துள்ளன. எனது நண்பர் ஒருவர் ஆடி அமவாசை தினத்தன்று தனது காதலியைக் கூட்டிக்கொண்டு சென்றுவிட்டார். அவர் தற்பொழுது மிகவும் நல்ல நிலையில் வாழ்கிறார்.

கன்மபயன், வினைப்பயன், ஊழ் என்று பெரியவர்கள் கூறுவதை எல்லோரும் கேட்டிருப்பீர்கள். ''இன்னாருக்கு இன்னாரென்று இறைவன் எழுதிவைத் திருக்கிறான்'' அதில் மாறுபட இடமில்லை. இருப்பினும் கடவுள் பக்தியால் எதையும் வெல்லலாம். முயற்சி யாலும் வெல்லலாம்.

619. ''தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்''.

ஊழ்வினை காரணமாக தெய்வத்தின் துணை இல்லாது இருந்தாலும், ஒருவன் முயற்சியால் தனது உடம்பை வருத்திய வருத்தத்தின் கூலியாவது கிடைக்கும்.

கடவுளை நம்புபவர்கள் எதையும் எப்போதும் செய்யலாம். இதில் இரண்டாவது வார்த்தைக்கு இடமில்லை. தாலிப் பொருத்தமில்லாவிட்டால் வாழைமரத்திற்குத் தாலியைக் கட்டிவிட்டு பின் மணப்பெண்ணிண் கழுத்தில் கட்டுவதும், இல்லாவிட்டால் சிவன் கோயிலில் கட்டுவதும் மரபு. இது தவிர ஒவ்வொரு நோய்களுக்கும் மருந்து உள்ளது போல ஒவ்வொரு தீய செயல்களுக்கும் பரிகாரங்கள் உண்டு.

சகுணம் என்றால் குற்றம் உள்ளது என்று கருத்துண்டு. சகுணப்பிரமம் என்றால் மாயையோடு கூடியது என்றும் பொருள். மாயை எப்போதும் தீமையையே தரும். உண்மையைக் காட்டாது.

பெரியவர்கள் சிலவற்றைக்கண்டால் நல்ல காரியம் செய்யக்கூடாது என்று சொல்கிறார்கள். பிரயாணத்திற்கு விலக்கப்பட்ட சகுணங்கள். ஒரு பிராமணன், மயிர் விரித்தவள், மொட்டைத்தலையன், எண்ணெய்தலையன், சன்னியாசி, காவி உடைதரித்தவன், விதவை, நோயாளி போன்றோரும், பின்னழைத்தல், கூடவருகிறேன் எனல் போன்றவற்றையும் கருடன், காடை, கலை மான், உடும்பு, கீரி, அணில், ஆந்தை இவை வலம் போதலும், காகம், நாரை, செம்போத்து நரி, கிளி, கொக்கு, மயில், கோழி, முயல், ஓணான் முதலியன இடம் போதலும் எதிர்ப்படின் பிரயாணம் செய்யலாகாது என்று கூறப்படுகிறது.

நாம் புறப்படும் போதும், நல்ல காரியம் செய்யும்போதும் குளித்துக் கடவுளை வணங்கி திருநீறு அணிந்து செல்லல் வேண்டும். இப்படிச் செய்தால் நல்ல சகுணங்கள் தான் எதிர்ப்படும்.

தீய சகுனமானால் சிறிது நேரம் தாமதித்துக் கடவுளை வணங்கிவிட்டுச் செல்லலாம்.

சகுணங்கள் எமது வாழ்வின் முன்னறிவிப்புக்கள்.

எமது கன்மபயன்கள் கன்ம வினைப்படி தொடங்கவிருக்கும் செயல் நட்டமடையும், இலாபமடையும், நோய்வரும், துக்கமேற்படும் என்றிருந்தால் அதன் முன்னறி - விப்பாகத் தீய சகுணத்தை எதிர்கொள்ள வேண்டி வரும்.

சிலர் புறப்படும்போது தனக்கு இலாபம் தருபவர்கள் என நம்புவோரை முன்னே செல்ல விடுவது வழக்கம். எனது நண்பர் ஒருவர் தனது மனைவியை முன்நிறுத்தித் தான் பயணங்கள் செய்வார். ஒருநாள் அவர் புறப்படும் போது தனது மனைவியை முன் நிறுத்ததித் தான் புறப்பட்டார். அன்று அவர் விபத்துக்குள்ளாகி ஒரு காலை இழந்தார். அப்பொழுது சகுணம் எங்கே போனது?

சகுணங்களைக் கொண்டு இலாப நட்டம், நோய், துன்பம், சுகக்குறைவு ஆகியவற்றை அறியலாம். ஆனால் பக்தியுள்ளவர்களுக்கு கடவுள் ஏற்ற சகுணங்களை முன்வைப்பார்.

மார்க்கண்டேயரது கதையும் அபிராமிப்பட்டரது கதையும் இதை விளக்குகின்றன.

204. ‘‘மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
அறம் சூழும் சூழ்ந்தவன் கேடு’’.

பிறருக்குக் கேடு விளைவிக்கும் தீய செயல்களை ஒருவன் மறந்தும் எண்ணக் கூடாது. எண்ணினால் எண்ணுபவனுக்கு அறம் கேட்டை உண்டாக்கும்.

206. ‘‘தீப்பால தான்பிறர்கண் செய்யற்க நோய்ப்பால

தன்னை அடல்வேண்டா தான்''.

தீமைகள் வராது இன்பமாக வாழ விரும்புகின்றவன், தீய செயல்களைத் தான் பிறருக்குச் செய்யாதிருத்தல் வேண்டும்.

207. ''எனைப்பகை உற்றாரும் உய்வர் வினைப்பகை

வீயாது பின்சென்று அடும்.

எவ்வளவு கொடிய பகையை உடையவனும் தப்பி வாழலாம். ஆனால் தீய செயல்களைச் செய்வதால் வரும் பகை அவனைப் பின்தொடர்ந்து சென்று வருத்துவதால் அதிலிருந்து அவனால் தப்ப முடியாது.

208. ''தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை

வீயாது அடிஉறைந் தற்று''.

ஒருவனது நிழல் எப்பொழுதும் அவனது காலடியில் தங்கியிருப்பதைப் போலத் தீய செயல்களைச் செய்தவரை அவற்றின் பயன் அவருடைய நிழலைப் போலத் தங்கியிருந்து கெடுக்கும்.

மேற்கூறப்பட்ட குறள்கள் தீவினை அச்சம் பற்றிக் கூறுகின்றன. அடுத்தவர்களுக்குத் தீங்கு செய்யாதவனுக்கு ஒரு போதும் தீமை வராது.

எது நடக்க வேண்டுமோ அதுவே நடக்கும்.

நீ எதைச் செய்தாயோ அதைப் பெறுவாய்.

நீ எதை எடுத்தாயோ அதை நீ கொடுப்பாய்.

எது உன்னுடையதோ அது உன்னைச் சுற்றியே வரும்.

கன்மவினைதான் சகுணமாக முன்வரும். கடவுளின் அருள் இருந்தால் காரியம் ஒப்பேறும்.

376. ''பரியினும் ஆகாவாம் பால் அல்ல; உய்த்துச்

சொரியினும் போகா தம''.

ஊழின் காரணத்தால் தமக்குரியவை அல்லாத பொருள்களை வருந்திக் காப்பாற்றினாலும் தங்காமல் போய்விடும்; தமக்குரியவையை கொண்டு போய்க் கொட்டினாலும் போகாது.

இக்குறளின் பொருள் சைவசித்தாந்தத்தின் கன்மம் பற்றிக் கூறுகிறது.

4. "வேண்டுதல் வேண்டாமை இலான்அடி சேர்ந்தார்க்கு

யாண்டும் இடும்பை இல".

எவ்வுயிர் மீதும் விருப்பு வெறுப்பில்லாத இறைவனின் திருவடிகளை நினைக்கின்றவர்களுக்கு ஒருபோதும் துன்பம் இல்லை.

5. "இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்

பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு".

இறைவனின் மகிமையை அறிந்து, அன்பு செலுத்துபவர்களைப் பிறவித்துயருக்குக் காரணமான நல்வினையும் தீவினையும் சேர்வதில்லை.

கடவுளின் கிருபையைப் பெற்றவர்களுக்கு எவரும் துன்பஞ் செய்யமுடியாது. அப்படித் துன்பமேற்பட்டால் கடவுள் வெளிப்பட்டு வந்து அவனைக் காப்பாற்றுவார். எனவே சகுனத்தை நம்பத்தேவையில்லை. நாள் நேரம் பார்க்க வேண்டியதில்லை.

17) ஆலயங்களிற் சென்று சுவாமியைத் தரிசிக்கும்போதும், பெரியவர்கள் ஆறுதல் வார்த்தைகள் கூறுகின்றபோதும் அமைதியடையும் மனம் பின் அமைதியிழந்து துன்பப்படுவதற்குக் காரணம் என்ன?

இதற்குக் காரணம் நம்பிக்கையீனமே. ஆலயங்களில் கடவுளை வணங்கும் போது, "கடவுள் எனது துன்பங்களை நீக்குவார்" என்று நம்புவோர் வீட்டிற்கு வந்ததும் அந்த நம்பிக்கை இழந்துவிடுகிறார்கள். பெரியவர்கள் கூறும் வார்த்தைகள் அவர்கள் கூறும்போது துன்பத்தைக் குறைக்கும். உண்மையான நிலையை எடுத்துரைக்கும். அதனால் மனம் அமைதியடையும். பெரியவர்கள் விலகியதும் துயர நினைவுகள் மீண்டும் மனதைப் பற்றிப் பிடிப்பதால் பெரியவர்கள் கூறிய வார்த்தைகளில் நம்பிக்கை இல்லாது போய்விடும்.

கடவுளின் கிருபையால் தான் ஒருவனுக்கு இன்பமான வாழ்வு கிட்டும் என்ற உண்மையைப் புரிந்து கொள்ளல் வேண்டும். துன்பங்கள் வரும் நேரத்தில் கவலைப்படுவதாலோ, நம்பிக்கையீனப்படுவதாலோ துன்பங்கள் குறையப்போவதில்லை. எரியும் விளக்கு அணைய முன் அது ஏன் அணையப்போகிறது என்று நினைத்து அது அணையாதபடி விளக்கிற்குத் தேவையானவற்றை ஈடுசெய்தல் வேண்டும். அது போலத் துன்பம் வரும்போது கடவுளின் மீது அதீதமான நம்பிக்கை கொள்ளல் வேண்டும்.

பெரியவர்களது வார்த்தைகள் வலிமையானவை; உயிருள்ளவை; வாடிய பயிருக்கு நீர் பாய்ச்சுவதைப்போன்றது

அவர்களது வார்த்தைகள். அதனால் அவர்களது வார்த்தைகளைத் துன்பங்கள் நேரிடும் போது மனதில் இருத்தல் வேண்டும்.

மனிதன் துன்பத்தை இலகுவாக வெல்ல முடியும்.

எதைச்செய்கிறாயோ அதை நன்மை உள்ளதாகச் செய்.

எதைச் செய்ய இருக்கின்றாயோ அதையும் நன்மையுள்ளதாகச் செய்.

உன்னிடமுள்ள அனைத்தையும் இழக்கத் தயாராக இரு. ஏனெனில் நீ எதையும் கொண்டு வரவில்லை.

கொண்டு வராதவையை இழந்ததற்காக ஏன் கவலைப்படுகிறாய்?.

நீ எதைப்பெற்றாயோ அவையெல்லாம் இறைவனால் உனக்குத் தரப்பட்டது.

நீ எதைக்கொடுத்தாயோ, அவையும் இறைவனால் உனக்குத் தரப்பட்டது.

நீ கொடுத்ததெல்லாம் இறைவன் உனக்குக் கொடுத்தது.

நீ பெறுவதெல்லாம் இறைவன் உனக்குக் கொடுப்பது.

மனிதன் எதையும் படைத்ததில்லை. அதுபோல மனிதன் எதையும் இழந்ததில்லை. உன்னுடையது இன்னொருவனுக்குச் செல்கிறது. வேறொருவனது மீண்டும் உன்னிடம் வருகிறது.

இழப்பும், சேர்ப்பும் அடிக்கடி மாற்றமடையும். இது தான் உலக நியதி.

இந்தத் தத்துவத்தை உணர்ந்தால் என்றும் இன்பமாக வாழலாம்.

443. ‘‘அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்’’.

பெரியவர்களைப் போற்றித் தனக்குச் சுற்றத்தவராக்கிக் கொள்ளுதல்,ஒருவன் பெறத்தக்க அரிய பேறுகள் எல்லாவற்றிலும் அரிதானதாகும்.

450. ‘‘பல்லார் பகைகொளலின் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல்’’.

நல்லவர்களின் தொடர்பைக் கைவிடுதல், பலரது பகையைத் தேடிக் கொள்வதை விடப் பத்து மடங்கு தீமையைத் தரும்.

657. ‘‘பழிமலைந்து எய்திய ஆக்கத்தின் சான்றோர்
கழிநல் குரவே தலை’’.

பழியை மேற்க் கொண்டு இழிவான தொழிலைச் செய்து பெறும் செல்வத்தை விடச் சான்றோர் தூமையோடு வாழ்ந்து பெறும் பொல்லாத வறுமையே சிறந்தது.

660. ‘‘சலத்தால் பொருள்செய்துஏம் ஆர்த்தல் பசுமண்
கலத்துள் நீர் பெய்துஇரீஇ யற்று’’.

வஞ்சகமான வழியால் பொருளைச் சேர்த்துக் காப்பது, பச்சை மண் கலத்துள் நீரை விட்டுக் காப்பாற்றுவதைப் போன்றது.

673. ‘‘ஒல்லும்வாய் எல்லாம் வினைநன்றே; ஒல்லாக்கால்
செல்லும்வாய் நோக்கிச் செயல்.

செய்ய வேண்டியவற்றை இயலுமான இடங்களிலெல்லாம் உடன் செய்து முடித்தல் நன்று. முடியாத போது அது பயன்படும் இடத்திலாவது செய்யதல் வேண்டும்.

மேற்கூறப்பட்ட குறள்கள் மனிதன் நல்ல வழியில் வாழவேண்டும் என்று கூறுகின்றன.

உனது வாழ்க்கையில் வரும் இன்ப துன்பங்களைப் பெற்றுக்கொள்வதில் நீயே முக்கிய பங்கு வகிக்கிறாய். வாழ்க்கையில் வரும் இன்பதுன்பங்களில் 90 சதவீதமானவை உன்னால் உண்டானவை. மிகுதி 10 சதவீதம் தான் பிறரால் உனக்குத் தரப்படுபவை. நீ நல்ல செயல்களைச் செய்தால் உனக்கு நல்லது செய்யக் கடவுள் முன்னிப்பார். இதை உணராது துன்பம் துன்பம் என்று சொல்லி வருந்துவதால் எந்தவிதமான பிரயோசனமும் இல்லை.